


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
# கல்முனை NET
kalmunainet.com
e paper






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஐப்பசி 27 (13.11.2021) இதழ் : 39



# ஆசிரியர்,அதிபர் சம்பள பிரச்சினைக்கு தீர்வு!

## பட்டதாரி பயிலுனர்களுக்கு நிரந்தர நியமனம்

## ஓய்வூதிய வயதெல்லை 65 ஆக அதிகரிப்பு

ஒரே பார்வையில், வரவு -செலவுத் திட்ட யோசனைகள் 2ஆம் பக்கம்

# குறுகிய காலத்தில் நாடு மீட்சி பெறாது!



காரசாரமான பேட்டி 4ஆம் பக்கம்

## 2022 பட்ஜட்:

# நடைமுறைக்கு சிக்கல்



கலாநிதி
எம். கணேசமூர்த்தி

## துண்டு விழும் தொகையை ஈடு செய்வது எப்படி?

(அலுவலக செய்தியாளர்)

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் பெரும்பாலானது ஆரோக்கியமானவையாக இருந்தபோதும் நடைமுறைப்படுத்துவது கஷ்டமாக இருக்கும் என பொருளியல் நிபுணர் கலாநிதி எஸ் கணேசமூர்த்தி சுட்டிக் காட்டினார்.

போதியளவு நிதி கிடைக்கும் பட்சத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியம் ஏற்படும் என்று கூறிய அவர்,

02

## அம்பாறை மாவட்டத்தில் இருந்து முதலாவது பெண் நீதிபதி நியமனம்



(யதுர்சன் )

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்திலிருந்து முதலாவது பெண் நீதிபதி திருமதி. ஜெகநாதன்சுபராஜினி நியமிக்கப்பட்டுள்ளார்

எதிர்வரும் 2021.11.15 திங்கட்கிழமை நீதிபதியாக சத்தியப் பிரமாணம் எடுக்கவுள்ளார்.

நீதிபதிகளுக்கான பதவி நியமன திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று, நேர்முக பரீட்சையிலும் தெரிவு செய்யப்பட்டு திருமதி ஜெகநாதன் சுபராஜினி இள வயதில் நீதிபதியாகின்றார்.

## கசப்புக் குளிசைக்கு இனிப்புத் தடவல்



'ஒப்பரேஷன் சக்ஸஸ்; ஆள் தப்பவில்லை' இதுதான் இந்த பட்ஜட்டின் நிலை. அபிவிருத்தி தொடர்பாக எதுவுமில்லை. சுருங்கச் சொன்னால் ஒரு அரசியல் பட்ஜெட் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். மூலோபாயங்கள் இல்லாமல் இருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிதிகளை எங்கிருந்து பெறப்போகிறார்களோ தெரியாது.

இந்த பட்ஜட் கசப்புக் குளிசைக்கு இனிப்புத் தடவியுள்ளது போன்றுதான் இருக்கின்றதென்றார் சிறிதரன் எம்.பி

## நிதி ஒதுக்கீட்டில் மதங்களுக்கு பாரபட்சம்



நிதி ஒதுக்கீட்டில் மதங்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. பௌத்த மதத்திற்கு நிதியுதவி செய்யப்பட்டுள்ளது போல் ஏனைய மதங்களுக்கு நிதி ஒதுக்கியிருக்கலாமென புளொட் தலைவரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறினார்.

02

## எதுவுமேயில்லை



அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைக்க எந்த ஏற்பாடுகளும் இல்லை. வெறும் அரசியல் இலக்கோடு இந்த பட்ஜட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

02



பாராளுமன்றத்தில் நேற்று நடந்த வரவு-செலவுத் திட்ட தேநீர் விருந்துபசாரத்தின் போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் அளவளாவுகிறார்.

## கூட்டமைப்பு சட்ட நிபுணர் குழு அமெரிக்கா பயணம்

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்எம்.ஏசுமந்திரன்தலைமையிலானதமிழ்த் தேசியக்கூட்டமைப்பு சட்ட நிபுணர்கள் குழு நேற்று அமெரிக்கா புறப்பட்டுச் சென்றது.

அமெரிக்காவின்விசேடஅழைப்பைஏற்று செல்லும் இவர்கள், 15ஆம் திகதி முக்கிய பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடுவார்கள் என்று தெரியவருகிறது.

02

## அதிபர், ஆசிரியர்கள் பிரச்ச....

'கொரோனாவால் மீண்டும் நாங்கள் வழமைக்கு திரும்புவது பாரிய சவால். அரச திறைசேரிக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூ. 500 பில்லியனுக்கும் அதிகம்' என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2022-ம் ஆண்டுக்கான வரவு, செலவு திட்டத்தை சமர்ப்பித்து நேற்று பாராளுமன்றத்தில் தனது யோசனைகளை முன்வைத்த அவர், ஆசிரியர், அதிபர்கள் சம்பள பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் 30 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார் .

ஒரே பார்வையில், வரவு - செலவுத் திட்ட யோசனைகளை இங்கே தருகின்றோம் :

* அரசாங்க ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லை 65 ஆக அதிகரிப்பு.
* கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு 1500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* கொவிட் - 19 தொற்றுக் காலத்தில் பாதிப்புக்குள்ளான முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு 700 மில்லியன் ரூபா நிவாரணம் ஒதுக்கீடு.
* பாடசாலை மூடப்பட்டமையினால் பாதிக்கப்பட்ட பஸ், வேன் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* கொரோனா தொற்றுப்பரவல் காலத்தில் பாதிப்புக்குள்ளான மொத்த, சிறு, மத்திய வியாபாரங்கள் மேற்கொள்வோரின் நலன் கருதி 5000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களுடைய தொகுதிகளில் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு 05 மில்லியன் ரூபா மேலதிக நிதி ஒதுக்கீடு.
* பெருந்தோட்ட மக்களுக்கு புதிய குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கு 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* வீடு மற்றும் நகர அபிவிருத்திக்காக 2 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு.
* வீதி அபிவிருத்திக்கென 20 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு
* பத்திக் ஆடை உற்பத்தி உள்ளிட்ட தேசிய உற்பத்திகளை அதிகரிக்க 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீட்டு சட்டத்தின் ஊடாக இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* மீன் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* பெருந்தோட்ட, சிறு பயிர்ச்செய்கைகளின் விளைச்சலை அதிகரிப்பதற்காக நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக 10 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு.
* உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டில் விவசாய தொழில்நுட்பத்தை துரிதமாக மேம்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.
* 2022 ஆம் ஆண்டுக்கு தேவையான சேதன பசளையை உற்பத்தி செய்வதற்கு முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்.
* நஞ்சற்ற உணவு பொருட்களை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு உதவிகள் வழங்கப்படும்.
* நாட்டில் 80 வீதமானோர் விவசாயத்துறை, விவசாயத் துறைசார்ந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். விவசாயத்துறையில் உள்ள சவால்களை நாம் அடையாளங்கண்டுள்ளோம்.
* அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளைப் பொறுத்த வரையில், அவை பொதுமக்களுக்கான முதலீடுகள் என்றே கருதுகிறேன்.
* புதிய வியாபாரத்தை பதிவு செய்வதற்கு அறவிடப்படும் கட்டணத்தை 2022ஆம் ஆண்டு அறவிடாதிருப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.
* வெளிநாடுகளுக்குச் செல்ல காத்திருக்கும் 130,000 பேருக்கு விரைவாக தடுப்பூசி வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றோம்.
* வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் மூலம் கிடைக்கும் வெளிநாட்டு செலாவணியை அதிகரிப்பதற்காக, தூதுவர்களுடன் கலந்துரையாடி வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை.
* வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்காக தற்போதுநடைமுறையிலுள்ள நிபந்தனைகளை தளர்த்தி புதிய முறைகளை அறிமுகப்படுத்த திட்டம்.
* காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு 300 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* அரச நிறுவனங்களில் 2015 முதல் அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்டோருக்கு 100 மில்லியன் ரூபா நிவாரணம்
* உலக சந்தையில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட ஏனைய பொருட்களின் விலை அதிகரிப்பால் உள்நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்து பொது மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது. அவ்வாறு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு 31 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* சிறைச்சாலைகளில் தங்க வைக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அனைத்து சிறைச்சாலைகளிலும் உள்ள கைதிகளின் உடல் நலனை பேணுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.
* பொதுமக்கள்பாதுகாப்புக்கெனபொலிஸ் திணைக்களத்துக்கு 500 மில்லின் ரூபா நிதி ஒதுக்கீடு

## எதுவுமேயில்லை...

பட்ஜட் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மக்களின் எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கப்பட்டுள்ளதோடு ஏமாற்றப்பட்டுள்ளனர்.

நிதி மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு பற்றாக்குறையின் முக்கியக் கட்டமைப்பு பிரச்சினைகளைத் தீர்க்க இந்த வரவு செலவுத் திட்டத்தில் எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை.

தலீடுகள், ஏற்றுமதிகள், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புக்களில் புதிய திட்டங்கள் எதுவும் இல்லையெனவும் கூறினார்.

## 2022 பட்ஜட்: நடைமுறை...

உட்கட்டமைப்புக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், நிதி மூலாதாரங்கள் சொல்லப்படவில்லை. கிராமிய மக்களை மையப்படுத்திய நிதி ஒதுக்கீடுகளாக இருக்கின்றது என அவர் கூறினார்.

நாட்டின் வருவாயைப் அதிகரித்துக் கொள்வதில் பல்வேறு சவால்கள் இருப்பதாக நிதி அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

நேரடி முதலீடுகள் வராமல் ஏற்றுமதி வருமானம் இல்லை. உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சி. வெளிநாட்டு கையிருப்பு குறைந்துள்ளது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட நெருக்கடிகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாரிய சவாலாக இருப்பதாக நிதி அமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்த சவால்களை எதிர்கொண்டு இந்த பட்ஜட் யோசனைகள் நடைமுறைப்படுத்துவதிலேயே வெற்றி தங்கியுள்ளதெனவும் கலாநிதி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள் காசு அனுப்புவதில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் சுட்டிக்காட்டினார். இதில் 2020இல் அதிகரிப்பு இருந்தது. ஆனால், உண்டியல் பரிமாற்றத்தால் 2021இல் வீழ்ச்சி காணப்படுவதாகவே தெரிகிறது. இதற்கு, டொலரின் வாங்கும் விலை மற்றும் விற்கும் விலைகளில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் உண்டியல் பணப் பரிமாற்றத்தை ஊக்குவித்து இருக்கிறது. இதனால்,நாட்டுக்கான வருவாய் இழக்கப்படுகிறதென்றும் கலாநிதி கணேசமூர்த்தி கூறினார்.

நடைமுறையில் மக்கள் எதிர்கொள்ளும் விலைவாசி தொடர்பில் எதுவும் பட்ஜட்டில் சொல்லப்படவில்லை. இது சாதாரண மக்களின் எதிர்பார்ப்பை சங்கடப் படுத்தியிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

வங்கிகள், காப்புறுதி கூட்டுத்தாபனங்களுக்கு வரி விதிக்கும் தீர்மானம் மக்களைப் பாதிக்கும். மக்களை பாதிக்காத வகையில் வரிவிதிப்பு செய்வதாக நிதியமைச்சர் கூறினாலும், நடைமுறையில் சாத்தியமில்லை என்றும் திரு. கணேசமூர்த்தி கூறினார்.

ஓய்வூதிய வயதெல்லை 65ஆக அதிகரித்திருப்பது நல்லது. இது கடுமையாக ஆராய்ந்து அரசு செய்துள்ளது. சுமார் ஒரு இலட்சத்து 30,000 இளைஞர்கள் வெளிநாடு செல்லத் தயாரான நிலையில், புதிய இளைஞர்களை அரச தொழில்களில் சேர்ப்பது சிரமத்தை ஏற்படுத்தும். இதனால்,ஓய்வூதிய வயது எல்லையை அரசு அதிகரிக்கிறது. புதியவர்களை சேர்த்து கொள்வதைவிடவும்

பழையவர்களை சேவையில் வைத்திருப்பது இலாப ம் என்று அரசு கருதியுள்ளது போல் தெரிகிறது என கலாநிதி விளக்கினார்.

இந்த பட்ஜட்டில் இன்னும் ஒரு பிரச்சினை இருக்கிறது. துண்டு விழும் தொகை சொல்லப்படவில்லை. யோசனைமுன்வைக்கப்பட்டு நிதி ஒதுக்கப்பட்டாலும், எப்படி அதற்கான நிதி மூலங்களை பெறுவதென்பதும் சொல்லப்படவில்லை. இதனை ஒரு குறையாகவே பார்க்க முடிகிறது என்றும் திரு.கணேசமூர்த்தி கூறினார்.

இதைவிட, தோட்டத் தொழிலாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி மிகவும் ஆரோக்கியமானதென கூறும் இவர்,லயன் அறைகளுக்கு பதிலாக வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு புது வாழ்வை ஏற்படுத்தும் என்றும் விளக்கினார்.

மொத்தத்தில் கிராமிய பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் இலக்கு வைக்கப்பட்ட பட்ஜட் என்று கலாநிதி கணேசமூர்த்தி கூறினார்.

## தமிழ் கூட்டமைப்பு...

இந்தக் குழுவுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராசமாணிக்கம் சாணக்கியனும் சென்றிருக்கிறார்.

அமெரிக்கா செல்லும் குழுவினர் 20ம் திகதி அங்கிருந்து புறப்படுகிறார்கள். சுமந்திரன் தவிர்ந்த மற்ற இருவரும் இலங்கை திரும்புகிறார்கள். சுமந்திரன் அங்கிருந்து பிரித்தானியா செல்கிறார். அங்கு சில தனிப்பட்ட சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன.

இந்த சந்திப்பிற்கு சுமந்திரன் தனியாகச் செல்வதாகவே முன்னர்திட்டமிட்டிருந்தார். எனினும், சாணக்கியனையும் அவர் உதவியாக அழைத்துச் செல்கிறார்.

சாணக்கியனிற்கு விசா வழங்குமாறு அவர் கோரியதையடுத்து, பிரித்தானியா தூதரகம் நேற்று முந்தினம் அந்த விசாவை வழங்கியது. கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்திற்கு சென்ற சுமந்திரன், சாணக்கியன் பிரித்தானியா விசாவைப் பெற்றுக் கொண்டனர். இதன்போது பிரித்தானியா தூதருடன் எடுத்த புகைப்படத்தையும் பதிவிட்டுள்ளனர்.

பிரித்தானியாவிலிருந்து கனடா செல்லும் இருவரும் இங்கு தமிழ் அரசு கட்சியின் கனடா கிளையினருடன் கலந்துரையாடல்களை நடத்திவிட்டு 28ம் திகதி நாடு திரும்புவார்கள்.

இதேவேளை, சுமந்திரன் அமெரிக்கப் பயணம் பற்றி இலங்கை தமிழ் அரசு கட்சிக்குள் யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. பத்திரிகை செய்திகள் வெளியான பின்னரே அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை அறிந்திருந்தனர். கட்சியின் முக்கிய எம்.பி களான சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் போன்றவர்களும் பத்திரிகையைப் படித்தே தகவலை அறிந்து கொண்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## நிதி ஒதுக்கீட்டி...

பட்ஜட் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என 300 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. என்றாலும்,உறவுகளை பிரிந்து தவிப்போரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். நிதி ஒதுக்கீடு மாத்திரம் அந்த பிரச்சினையைத் தீர்க்காது.

எம்.பி மாருக்கான நிதி ஒதுக்கீடு 15மில்லியன் ரூபாவாக அதிகரித்திருப்பது ஓரளவு நல்ல விடயம். எம்.பி மாருக்கான ஓய்வூதிய வயதெல்லை 10 வருடங்களாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனை எப்படி நடைமுறைப்படுத்துவார்களோ தெரியாது என்றும் சித்தார்த்தன் எம்.பி கூறினார்.

## வரவு செலவு திட்ட பற்றாக்குறை 8.8%!

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் நேற்று (12) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த வரவு செலவு திட்ட யோசனைக்கு அமைய இம்முறை எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் 2,284 பில்லியன் ரூபாவாகும்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்படி, மதிப்பிடப்பட்ட மொத்த செலவினம் 3,912 பில்லியன் ரூபாவாகும்.

இதன்படி, வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை ரூபா 1,628 பில்லியன் அல்லது 8.8% ஆகும்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## இந்தப் பருப்பு இனியும்...

நாட்டில் இருந்து மூளை சாலிகள் வெளியேறிச் செல்வதற்கு காரணமாக அமைகின்றது.

இந்த நெருக்கடிக்கு தீர்வு கண்டு நாட்டை சரி செய்து கட்டியெழுப்புவது என்பது சாதாரண விடயமல்ல.

மக்கள்கொதித்து,கொந்தளித்துபோயிருக்கும் நிலையில், மேடைகளில் உருக்கமாக பேசியோ அல்லது மக்களை நேரடியாக சந்தித்தோ, மீளக் கட்டியெழுப்ப முடியும் என்ற அளவுக்கு நாடு இல்லை என்பதுதான் யதார்த்தமான உண்மை.

தற்காலிக ஏற்பாடுகள் மூலம், அரசு இந்த பிரச்சனையிலிருந்து மீள்வதற்கு முயன்றாலும், மக்கள் மத்தியில் இழந்த செல்வாக்கை கட்டியெழுப்புவதென்பது பெரும் கஷ்டமாகவே இருக்கும். இனவாதத்தை ஆயுதமாக்கி ஆட்சியைப் பிடித்தவர்கள், இருப்பை தக்கவைக்க அதே இனவாத ஆயுதத்தை தூக்கி பிடிக்கலாம். அல்லது இனங்களை உசுப்பிவிட்டு, அதற்கான முயற்சிகளில் இறங்கலாம்.

ஆனால், இந்தப் பருப்பு இனியும் வேகுமா?

## சிகரெட் விலைகள் அதிகரிப்பு

சிகரெட் விலைகளை 5 ரூபாவால் அதிகரிப்பதற்கு யோசனை முன் வைக்கப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதன்மூலம், 8 பில்லியன் ரூபா மேலதிக வருமானம் கிடைக்கும் என்றும் அவர் சபையில் அறிவித்தார்.



கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு,
கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



**பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்**
**மருளானாம் மாணாப் பிறப்பு.**
மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

# இந்தப் பருப்பு இனியும் வேகுமா?

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் உக்கிரம் அடைய தொடங்கியிருக்கின்றன. "அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் போராட்டம்" என்ற தொனியில், மனோ கணேசன் எம்பி மக்களைத் திரட்டி, நுவரெலியாவில் போராட்டத்தை நடத்தினார்.

"ஊரில் இருந்து தொடங்குவோம்" என்ற செயல்திட்டத்தை ஜே.வி.பி யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்திருக்கிறது.

இதேபோல, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளும், அரசாங்கத்துடன் இருக்கும் முன்னாள் அமைச்சர்களும் அரசாங்கத்துக்கு எதிராக பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட, தனது விமர்சனத்தை நாகரிகமாக சொல்லியிருந்தார். ஆளும் பொது ஜன பெரமுன கட்சியின் வருடாந்த மாநாட்டில் பேசிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, "ஆட்சி அமைந்ததும் மக்களிடம் செல்லாமல் போனதுதான் இன்றைய நெருக்கடி நிலைக்கு காரணம்" என்று கூறினார்.

அந்த கட்சியின் தலைவரே அரசாங்கத்தின் மீது விமர்சனத்தை முன்வைப்பது, ஆட்சியின் நிர்வாகத்தில் எங்கேயோ தவறு இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

கொரோனா இலங்கையில் மட்டும் கோரத்தாண்டவம் ஆடவில்லை. உலகத்தையே வதைக்கூடமாக்கி இலட்சக் கணக்கானோரை பலி கொண்டது. என்றாலும், அனைத்து நாடுகளும் மீண்டெழுந்த நிலையில், இலங்கை ஏன் இப்படி சின்னாபின்னமாகிப் போய் நிற்கிறது? என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. கடுமையாக பாதிக்கப்பட்ட இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் கூட, இலங்கைக்கு கடன் வழங்கும் அளவுக்கு தலை நிமிர்ந்து நிற்கின்றன. இது நாம் வெட்கி தலைகுனியும் நிலை.

தமிழ் – முஸ்லிம் மக்களின் ஆதரவு இல்லாமல், தனிச் சிங்கள மக்களின் வாக்குகளால் மட்டும் ஆட்சியை அமைத்த மமதை, அனைத்தையும் மறைத்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசியல் தலையீடுகளுடன், நிதி முகாமைத்துவத்தை கையாண்ட விதம், இந்த நெருக்கடிக்கு காரணமாக அமைந்திருக்கிறது என்பது பொருளில் நிபுணர்களின் கருத்தாகும். இப்பொழுது, நாட்டில் எதையெடுத்தாலும் தட்டுப்பாடும் நீண்ட வரிசையுமாகவே இருக்கின்றன. சமையல் எரிவாயுவுக்கு காத்திருந்து.. காத்திருந்து.. ஸ்ரீமான் பொதுஜனங்கள் களைப்படைந்து விட்டன.

இந்த துர்ப்பாக்கிய நிலையில், இளைஞர்களும் யுவதிகளும் இப்போது நாட்டைவிட்டு வெளியேற, தொடங்கி விட்டார்கள். இரண்டு வாரங்களுக்குள் இலட்சக்கணக்கான கடவுச் சீட்டுக்கள் வினியோகிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலை, வருவாயைக் கொண்டு பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தாலும், கவலைக்குரிய விடயம் என்பதை யாரும் புரிந்து கொண்டதாக இல்லை.

இந்த நாட்டு அரசாங்கத்திலும், நாட்டின் எதிர்காலத்திலும் நம்பிக்கை இழந்த நிலையில் தான் இவர்கள் நாடு விட்டு நாடு சென்று தொழில் தேடிக் கொண்டிருக்கின்றனர். அரசாங்கம் இதனை ஒரு நெருக்கடியாகவும் பார்க்கவில்லை; பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையரால், அனுப்பப்படும், அந்நிய செலவாணியை கணக்குப்போட்டு பார்க்கிறது இலங்கை அரசு.

நாட்டுக்கான வருவாயாக அரசு இதனை பார்த்தாலும், மூளைசாலிகள் நாட்டில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள் என்பது எவ்வளவு பாரதூரமானது.

இந்த நாட்டின் ஏழை எளிய மக்களின் வரிப்பணத்தில் இலவசமாகக் கல்வி கற்றவர்கள், தாய்நாட்டுக்கு உழைக்காமல் இன்னொரு நாட்டுக்கு நிபுணத்துவத்தை வழங்குவது வேதனைக்குரிய விடயம். அதேநேரம், நாட்டுக்கு பாரிய பொருளாதார இழப்பாகும் என்பதை யாரும் புரிந்து கொள்ளவில்லை.

இந்த அரசின் மீதும் அரச தலைவர்கள் மீது வைத்த நம்பிக்கை, வீணாகிப் போனதன் விளைவுதான், நம்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...

# ஆரோக்கியமான நகர்வு



**• அரசியல் அலசல்**

**அலசுவது நிப்ராஸ்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை, தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவரான மனோ கணேசனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் அவரது இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

கடந்த 6ஆம் திகதி மாலை சம்பந்தன் ஐயாவின் கொழும்பு இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, கடந்த 2 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் உரையாடல் தொடர்பாக, ஹக்கீமும் மனோவும் கூட்டமைப்பு தலைவருக்கு எடுத்துக் கூறினர்.

இதில், வடக்கு, கிழக்கில் முன்னணி கட்சியாக திகழ்கின்ற தமிழரசுக் கட்சியும், சிரேஷ்ட தலைவரான சம்பந்தனும் கலந்து கொள்வதை தாம் விரும்புவதாக மனோ கணேசனும் ஹக்கீமும் எடுத்துக் கூறினர்.

தமிழ்பேசும் தரப்புக்கள் ஐக்கியப்பட்டு செயல்படும் முயற்சி குறித்து பேசுவதற்கு இந்த சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதாக தெரியவருகிறது.

> **"இனவாதிகளின் கழுகுப் பார்வைக்குள் தப்ப வேண்டும்"**

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் மத்தியில் பொதுவான ஒரு தளம் ஏற்படுவதன் அவசியத்தை ஏற்றுக்கொண்ட இரா. சம்பந்தன், 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

"13ஆவது திருத்தம் தான், இந்த நாட்டு அரசியல் அமைப்பில் இடம் பெற்ற ஒரே ஒரு அதிகார பரவலாக்கல் சட்டம். ஆனால், 13வது திருத்தம் ஒரு முடிவல்ல; ஆரம்பம். அது தீர்வல்ல; அது ஓர் அஸ்திவாரம். அதிலிருந்து கட்டிடம் கட்டப்பட வேண்டும்" என்று சுட்டிக்காட்டினார்.

"ஈழத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் எல்லோரும் சிங்களவர்களுடன் சேர்ந்து, இலங்கையர் என உணரும் அடிப்படையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் முறையில்,தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். தீர்வை நோக்கிய பயணத்தில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை முயற்சியை, அகில இலங்கை தமிழரசுக்கட்சி, ஒருபோதும் குழப்பாது. நாங்களும் கலந்து பேசத்தான் வேண்டும். கலந்து பங்களித்து ஒற்றுமையை மேலும் பலப்படுத்த வேண்டும்" என்று சம்பந்தன் தெரிவித்ததாக தெரிகிறது.

13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறு இலங்கையை வற்புறுத்தும்படி, தமிழர் தரப்புக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து, இந்தியாவை கோருவதற்கான ஓர் ஏற்பாடு செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அதற்காக யாழ்ப்பாணத்தில் டெலோ கட்சியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி பங்குபற்றவில்லை.

இந்த சந்திப்பு குறித்து மனோ கணேசன் எம்.பியும், ஹக்கீம் எம்.பியும் திருப்தி தெரிவித்தனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், "மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துதல், 13வது திருத்தச் சட்டத்தினை அமுலாக்கல் உள்ளிட்ட விடயங்கள் மற்றும் சிறுபான்மை தமிழ் பேசும் சமூகங்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ் கட்சிகளுடன் ஒன்றிணைந்த பயணம் தொடரும்" என அவர் கூறினார்.

என்றாலும், இந்த சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் கலந்து கொண்டது தொடர்பாகவும் அவரது கருத்துக்கள் தொடர்பாகவும் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் முன் வைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ்த் தரப்புடன் ஒன்று இணைந்து பயணிக்க விரும்பும் மு.கா. தலைவர் ஹக்கீம், வடக்கு-கிழக்கு இணைந்த தீர்வை பகிரங்கமாக ஏற்றுக்கொள்வாரா? என்று தமிழர் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

அதேநேரம், தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை முழுமையாக ஏற்பதற்கு உள்ளார்ந்தமாக தயாரெனில், கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை ஹக்கீம் பகிரங்கமாக கூறுவாராயின், அவருடைய கருத்தை ஏற்க முடியும் என்கிறார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன். இதனை தமிழர் தரப்பு தர்க்கமாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

1949ஆம் ஆண்டு காலப்பகுதியில் தந்தை செல்வா, இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கி தமிழ் பேசும் மக்கள் என்ற சொல்லாடல் மூலமாக தமிழ் முஸ்லிம் மக்களை இணைத்து அகிம்சை ரீதியான அரசியல் போராட்டங்களை முன்னெடுத்தார். தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உருவாகிய காலத்திலும், பல இயக்கங்களில் முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து செயல்பட்ட வரலாறுகளும் இருப்பதாக அரியநேந்திரன் சுட்டிக்காட்டுகிறார்.

தமிழ் தேசியத்தை ஏற்றுள்ள, தமிழ்மொழிக்கு அரசியலில் சம அந்தஸ்துக் கோருகின்ற தமிழ் கட்சிகளுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய சந்திப்புக்கள், தற்கால அரசியல் சூழ்நிலைக்கும் காலத்துக்கும் ஏற்ற நகர்வாகவே பார்க்கப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டங்களின் போது, பிந்திய காலங்களில் (1985) விடப்பட்ட தவறுகளால், மூன்றாம் தேசியம் (முஸ்லிம்) உருவாகியுள்ளதாக நிலவிவரும் கருத்துக்களால்தான் இந்த விவாதங்கள் எழுந்துள்ளன.

தமிழர்களின் உரிமைப் போராட்டங்கள், துரதிஷ்டவசமாக துருவப்படத் தொடங்கிய 1990 க்குப் பின்னரான காலந்தொட்டு, இன்று வரைக்கும், இந்தச் சமூகங்கள் மீள இணைக்கப்படவில்லை. இணைப்பதற்கான சந்தர்ப்பங்களை தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகள் உருவாக்கவும் இல்லை. பெரும்பான்மை அரசியல் சக்திகளும் இந்த இணைவுகள் மீள ஏற்படாதவாறு இடர்களை ஏற்படுத்தியே வந்திருக்கின்றன.

இப்படியான துருவ மயப்படுத்தப்பட்ட நிலை தொடர்கின்ற போது, இந்தச் சந்திப்புக்கள் தேவைதானா? என்ற விவாதங்கள் எழுகின்றன.

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னராவது, சிறுபான்மைச் சமூகங்களின் தலைமைகள் அல்லது மிதவாதத் தலைமைகள் இந்தச் சமூகங்களின் மீளிணைவு பற்றிப் பேசியதாகவோ, அவ்வாறான முயற்சிகள் மேற்கொண்டதாகவோ பெரிதளவில் கூற முடியாதுள்ளது. அவ்வாறு பேசப்பட்டாலும்,தேர்தல் காலத்துக்கான தேனிலவுப் பேச்சுக்களாகத்தான் அவை இருந்ததுண்டு.

தொடர்ச்சி 07ஆம் பக்கம்...



# தோல்வியடைந்த அரசை விரட்டியடிக்க வேண்டும்

## மனோ கணேசன் எம்பி கல்முனை நெற்றுக்கு பரபரப்புப் பேட்டி

**சிரேஷ்டதமிழ் அரசியல்தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவர்கள் 'கல்முனை நெற் -மின் இதழுக்கு' வழங்கிய பிரத்தியேகப் பேட்டி இது. நாம் கேட்ட கேள்விகளுக்கு அவர் வழங்கிய நறுக்கான அதிரடி பதில்கள் இவை:**

**கே: இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல், பொருளாதார நெருக்கடிக்கு யார் காரணம் என்று நினைக்கின்றீர்கள்?**

இன்று நாட்டில் ஏற்பட்டிருப்பது வெறுமனே அரசியல், பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல. அது உண்மையிலேயே அரசியல் பொருளாதார சமூக கலாசார தேசிய நெருக்கடி என்று நினைக்கின்றேன். யார் காரணமாக இருக்கமுடியும்? வாக்களிக்கின்ற மக்கள் தான், குறிப்பாக, சிங்கள பௌத்த வாக்களிக்கின்ற மக்கள் தான் தகுதியற்ற கட்சிக்கும் நபருக்கும் வாக்களித்து இன்று அரசாங்கத்தை உருவாக்கி வைத்துள்ளார்கள். அதற்காக, தமிழ் பெரும் குடிகள் அதாவது, தமிழ், முஸ்லிம் வாக்காளர்களை நான் பாராட்ட விளையவில்லை.

இப்படி நெருக்கடியுள்ள காலகட்டத்தில் கூட, பாராளுமன்றத்தைப் பார்த்தால் தமிழ், முஸ்லிம் எம்.பிகளின் செயற்பாடு, கட்சித் தலைவர்களின் செயற்பாடு திருப்திகரமாக இல்லை. ஆகவே, ஒட்டு மொத்தமாக வாக்காளர்கள் காரணமாக இருக்கிறார்கள். அதை தவறான நபர்கள், கட்சிகள் என்றும், வேட்பாளர்கள் என்றும் கூறி பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில், ஒட்டு மொத்தமாக, இலங்கை வீழ்ச்சியடைந்துகொண்டிருக்கின்றது.

**கே: இன்றைய நிலைக்கு கொரோனாவின் தாக்கமும் டொலரின் பெறமதி அதிகரிப்பும் காரணமென அரசு கூறுகின்றது. இது அரசின் நிர்வாகப் பலவினத்தைக் காட்டவில்லையா?**

ஆம், இதைவிட இந்த அரசாங்கத்திற்கு இதைத்தான் கூறிட முடியும். ஏதோ கொரோனா என்பது இலங்கைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு கொள்ளை நோயாக இவர்கள் காட்ட விளைகிறார்கள். அப்படியல்ல, அது உலகளாவிய தொற்று.

தென்னாசியாவிலே இந்தியா, பங்களாதேஷ், பாக்கிஸ்தான், ஆப்கானிஷ்தான், மாலைதீவு ஆகிய எல்லா நாடுகள் உட்பட இந்த கொரோனாத் தொற்றால் பாடாய்ப்பட்டது. இருந்தும் கூட இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இலங்கைக்கு பல மில்லியன் டொலர் கடன் வசதிகளை தந்துள்ளார்கள். அவர்கள் எப்படி தந்தார்கள்? தங்கள் நாட்டைப் பாடாய்படத்திய கொரோனாவை நிர்வாகம் செய்து பொருளாதாரத்தை நிர்வகித்துதான் தந்தார்கள்.

இதைப் பார்த்து கோட்டாபய ராஜபக்ஷ பாடம் படிக்க வேண்டும். வேறுமுறையில் சொல்ல வேண்டுமென்றால், இந்தியா இந்து நாடு. இந்து நாடு என்று சொன்னாலும் கூட, அதிகாரபூர்வமாக அது இந்து நாடு அல்ல. மதசார்பற்ற நாடு என்று சொல்லப்படுகின்றது. அதுபோல் பங்களாதேஷ் அதிகாரபூர்வமாக இஸ்லாம் நாடு என்று சொல்லப்படாவிட்டாலும் கூட, மதசார்பற்ற நாடு என்று சொல்லப்படுகின்றது.

இஸ்லாமிய நாடும், இந்து நாடும் தந்த கடனால் தான் கோட்டாபய ராஜபக்ஷ குடும்பத்தின் சிங்கள பௌத்த அரசாங்கம் ஜீவிக்கின்றது என்பதை, வெட்கமில்லாமலாவது இந்த ராஜபக்ஷ குடும்பம் இன்றாவது பகிரங்கமாக ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். டொலர் பெறுமதிகளை கேட்காதீர்கள். உங்களுக்கும் தெரியும் அது. 2015க்கு முன்னாலே 10 வருடங்களாக தொடர்ச்சியாக ஆண்ட ராஜபக்ஷ குடுப்பம் அடித்த கொள்ளை கடன் காரணமாகத்தான் இன்னமும் நாங்கள் பொட்டி கட்டிக் கொண்டிருக்கின்றோம். செலுத்த வேண்டிய கடன்களை செலுத்திக் கொண்டிருக்கின்றோம். இன்னும் பல வருடங்களுக்கு போகும். அதுதான் உண்மை.

**"இதுபோல் கேவலமான ஓர் அரசு வரலாற்றில் இருந்ததில்லை"**

**கே: நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இதிலிருந்து குறுகிய காலத்தினுள் மீட்சி பெறுவதற்கு நீங்கள் கூறும் யோசனை என்ன?**

குறுகிய காலத்தில் மீட்சி பெறவே முடியாது. அதை முதலில் மனதில் கொள்ள வேண்டும். புதிதாக இந்த கொரோனா பிரச்சினை மட்டுமல்ல, அதனைத் தாண்டிய கடந்த பல தசாப்தங்களாக நாட்டை ஆண்ட கொள்ளையடித்த பேரினவாத அரசாங்கங்களினால் செயற்படத்தப்பட்டுள்ள நிலையில், இன்று எம் கண்ணெதிரே தோன்றி அதை நாங்கள் அறுவடை செய்ய வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். உடனடியாக சில நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உடனடியாக அரசாங்கம் சர்வ கட்சி கூட்டமொன்றைக் கூட்டி சர்வ கட்சி சபை ஒன்றை அமைக்க வேண்டும். இதில், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சி தலைவர்களும் இடம்பெற வேண்டும்.

இதற்கு பதிலாக தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று சிலர் சொல்லித் திரிகிறார்கள். இவர்கள் பதவி வெறியர்கள். தேசிய அரசாங்கம் என்பதில் நாங்கள் உடன்பாடு காட்ட முடியாது. எங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை. இந்த அரசாங்கத்தின் பாவங்களை நாங்கள் கழுவ முடியாது. ஆகவே, நாடு மீட்சி பெற வேண்டும் என்றால், அரசாங்கம் சர்வகட்சி சபையொன்றை அமைத்திடல் வேண்டும். 2015ம் வருடத்திலே ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பிறகு பல மாதங்களுக்குப் பிறகுதான் பாராளுமன்றத் தேர்தல் நிகழ்ந்தது. அதற்குள்ளே தான் பாரம் எடுத்த நாங்கள் பல முக்கியமான விஷயங்களை எல்லாம் நிறைவேற்றினோம். சட்டமூலம் நிறைவேற்றினோம். 19வது திருத்தமெனும் மகத்தான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. சுகாதார துறை சார்ந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. சொல்லிக்கொண்டே போகலாம்.

ஏன் சொல்கின்றேன் என்றால், இந்த காலகட்டத்திலே இலங்கையை ஆண்டது மைத்திரிபால சிறிசேன மட்டுமல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமல்ல, நானும் இடம்பெற்றிருந்த தேசிய நிர்வாக சபை என்ற ஒரு சபைதான் ஜனாதிபதி தலைமையிலே பிரதமர் தலைமையிலே நாட்டின் அதிமுக்கிய முடிவுகளை எடுத்தது. அப்படியான ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சூழல் இப்போது நிலவுகின்றது. அதைவிட மோசமான சூழல் நிலவுகின்றது. அதை சரிசெய்ய வேண்டும் அரசாங்கம். அடுத்து இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எல்லாம் பதவி விலக வேண்டும். வெறும் எம்.பிகளாக இருந்தால் போதும். அமைச்சர்களுக்கு உள்ள வரப்பிரசாதம் குறைக்கப்படல் வேண்டும். ஒரு வாகனம் மட்டும் பயன்படத்தப்பட வேண்டும். அவர்களது செயலாளர்கள் மற்றும் உதவியாளர்கள் குறைக்கப்பட வேண்டும். சம்பளம் குறைக்கப்பட வேண்டும். நாட்டிலே இப்போது பார்த்தால் பெருந்தெருக்கள் ஒரு இலட்சம் கிலோமீற்றர் செய்வதாக அரசு சொல்லித் திரிகிறது. இது ஏன் இப்பொழுது என்று கேட்கின்றேன். பெருந்தெருக்கள் மட்டுமல்ல, கட்டிடங்கள் வசதிகள் எல்லாம் தேவைதான்.

ஆனால் இப்பொழுது எல்லாம் ஒத்திவைக்கப்பட வேண்டும். தேவையில்லை. தெருக்கள் இல்லாமல் மக்கள் வாழ்வார்கள். பிரச்சினையில்லை. உணவில்லாமல், மருந்தில்லாமல் கல்வியில்லாமல், மக்கள் வாழ முடியாது. ஆகவே, அடிப்படை தேவைகள் சம்பந்தமாக முன்னேற்ற வேண்டிய தேவை எதுவென்பதை நாங்கள் கணிக்க வேண்டும். கணித்து ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை நிறுத்திவிட்டு இதற்கு முன்னுரிமை தர வேண்டும்.

மறுபுறத்திலே வெளிநாட்டுக் கொள்கையை பொறுத்த மட்டிலே சீனாவை மட்டும் உள்வாங்கிக் கொள்வதை நிறுத்திவிட்டு, உலகளாவிய ரீதியாக, பழைய அணிசேராக் கொள்கை இடம்பெற வேண்டும். இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் போன்ற நாடுகளையும் சீனாவிற்கு சமமாக சீனாவின் உறுப்பினர்களாக இருக்க சொல்லவில்லை. சமமாக அரவணைத்துச் செல்லும் செயற்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

தேசிய அதிகார நிர்வாகசபை அமைக்கப்பட்ட பிறகு, ஜனாதிபதி தனது நிர்வாகத்தினூடாக பெற்றுக் கொண்ட அதிகாரத்தையெல்லாம் நடைமுறைப் படுத்தக் கூடாது என்ற உறுதியுரையை நாட்டுக்குத் தர வேண்டும். இதனால்தான், இந்நாட்டிலே உடனடியாக சில மீட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என நான் நினைக்கின்றேன்.

**கே: இந்த அரசாங்கத்தில் அமைச்சரவை பொறுப்புடன் செயற்படுகின்றதா?**

இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர்களே இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை பொறுப்புடன் செயற்படவில்லையென்று சொல்லித்திரிகின்றார்களே. இதில் நான் என்ன சொல்ல வேண்டும். அமைச்சர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகிய பலர் சொல்லிவிட்டார்களே. அமைச்சரவை பத்திரங்கள் கொண்டுவரப்படவில்லை, விவாதிக்கப்படுவதில்லை. ஆனால், நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தென சொல்கின்றார்களே. இதைவிடக் கேவலமாக ஒரு அரசாங்கம் இந்த நாட்டு வரலாற்றிலே இருந்ததில்லையென்று இவர்களே கூறுகின்றார்களே. இதில் நான் என்ன சொல்ல வேண்டும்.

**ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி நாடு முழுவதும் மக்களைத் திரட்டி போராட்டம்**

**கே: விலைவாசி தொடர்பாக பார்ப்பது எனது வேலை அல்ல என ஜனாதிபதி கூறியுள்ளார். இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?**

**நேர்காணல்: குணராசா**

தொடர்ச்சி 05ஆம் பக்கம்...

# நாடு நெருக்கடியிலிருந்து இக்காலத்தில் மீட்சி பெறாது!

04ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏதோ ஒரு நோய் பிடித்து வாட்டுகிறது என நினைக்கின்றேன். நோயின் பிரதான அம்சம் சாத்தியமான ஞாபக மறதி என்று நினைக்கின்றேன். இவர்தான் கொள்ளைநோய் நாட்டை பிடித்து ஆட்ட தொடங்கிய பொழுது, முதல் அலையின் போ, எல்லா தொலைக்காட்சிகளிலும்தோன்றி ஒரு மணித்தியாலம் உரையாற்றினார்.

அதன்போது பேசிய ஒரு மணித்தியாலத்திலே விலைவாசி பற்றிதான் பேசினார். செமன் மீனைப் பற்றி பேசினார், அரிசி பற்றி பேசினார், பால்மா பற்றி பேசினார், மாவை பற்றி பேசினார். இன்னும் பல விஷயங்கள் பற்றிப் பேசினார். விலையெல்லாம் குறைக்கப் போவதாக சொன்னார். வர்த்தக பிரகடனம் செய்யப் போவதாகச் சொன்னார். ஒன்றும் சரிவரவில்லை. அது வேற விஷயம்.

இவ்வாறு வர்த்தக பிரகடனமெல்லாவற்றையும் வர்த்தக மாபியாக்கள் தூக்கி வீசி விட்டார்கள். இலங்கையிலே விலைகளை நிர்ணயிப்பது வர்த்தக மாபியாக்கள் தான். அரசாங்கம் அல்ல. கோட்டாபய ராஜபக்ஷ அல்ல. அதற்கான வேறு வழி இல்லை. கோட்டாபய இப்பொழுது வர்த்தமானியெல்லாம் வாபஸ் வாங்கி விட்டார். ஆகவே, இப்படி “விலைவாசி தொடர்பாக பார்ப்பது எனது வேலை அல்ல” வென்று ஏன் சொன்னார் என்றால், அவரால் செய்ய முடியவில்லை. தோல்வியடைந்து விட்டார் என்பதற்காக அவர் புது கதை சொல்கிறார். சிரிப்புத்தான் வருகிறது.

**கே: அரசாங்கத்தில் உள்ள பங்காளி கட்சிகள் அதிருப்தி அடைந்திருக்கின்றன. இது செயல் திறனற்ற அரசாங்கம் எனவும் குற்றம் சாட்டுகிறார்கள். இது கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரமா?**

இது சூரிய நமஸ்காரமே அல்ல. அவர்களிடம் கண்ணிருப்பதாகவே நான் கணக்கில் எடுக்கவில்லை. இந்த அரசாங்கத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பலை நாடுமுழுக்க ஓங்கி ஒலிக்கிறது. அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்திய தேரர்கள் உட்பட பல்வேறு சிங்கள பௌத்த பிரிவினர்களே, ஏன் பொதுமக்களே தெருவில் வந்து போராடுகிறார்கள். விவசாயி நடுத்தெருவிலே... ஆசிரியர்கள் நடுத்தெருவிலே... தோட்டத் தொழிலாளிகள் நடுத்தெருவிலே... மீனவர்கள் நடுத்தெருவில்... அரசாங்கம் கூட நடுத்தெருவிலே.. இவர்களையெல்லாம் பார்த்து பயந்து விட்டார்கள்.

ஆகவே, இப்பொழுது எதிரணி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை வீழ்த்தி விடும் என்பதற்காக, அரசாங்கத்துக்கு உள்ளே ஒரு எதிர் அணியை உருவாக்கி உள்ளார்கள். அதுதான் இந்த பங்காளிக் கட்சிகளின் சத்தம் என நினைக்கின்றேன். விமல் வீரவம்ச, உதய கம்மன்பில, இடதுசாரி கட்சி தலைவரான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்ற பலர் அங்கேயிருக்கிறார்கள். தமிழ் பேசும் அரசியல்வாதிகளிலே அதாவுல்லா, ஜீவன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா போன்ற கட்சித் தலைவர்கள் இருக்கின்றார்கள். எல்லோரும் சேர்ந்துதான் இந்த அரசாங்கத்தை கொண்டு வந்தார்கள். ஆகையால் அரசாங்கத்தில் செய்கின்ற அலங்கோலங்களுக்கு, துன்புறுகின்ற மக்களுக்கு, இவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமல்ல, மகிந்த, சமல், பசில், நாமல், யோசித மட்டுமல்ல இன்னும் உள்ள முக்கியஸ்தர்களும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். ஆகவே, இந்த அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் எதிரணி கும்பலின் கூச்சல் குழப்பத்தினை நான் கணக்கில் எடுக்கவில்லை. அதிலே பார்த்தாலும் கூட, சிங்களக் கட்சிகளின் தலைவர்கள்தான் கூடுதலாக கூச்சல் போடுகிறார்கள்.

**கே: அரசாங்கத்தை எதிர்த்து பிரதான எதிர்க்கட்சி ஏன் இன்னும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கவில்லை?**

உங்களுக்கெல்லாம் யார் சொல்வது என்று கேட்க விரும்புகின்றேன். அதாவது, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி ஆர்ப்பாட்டங்களில், எதிர்ப்பு செயற்பாடுகளில் இறங்கவில்லை என யார் உங்களுக்கு சொன்னது? இப்படியான கேள்வியை எழுப்புவது ஊடகவியலாளர்களான உங்களது இன்றைய பெசனாக ஒரு வேடிக்கையாகி விட்டது என நினைக்கின்றேன். இது பிழையானது. ஒவ்வொரு நாளும் நாடு முழுக்க எங்கேயோ மாவட்டத்தில், எங்கேயோ ஒரு ஊரிலே, ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி கூடி ஆர்ப்பாட்டம் செய்து கொண்டுதான் இருக்கின்றது. எங்களது எம்பிக்கள் சிஐடிக்கு சென்று அரசாங்கத்துக்கு எதிராக பொலிஸில் புகார் பதிவு செய்து கொண்டு தான் இருக்கின்றார்கள். அதேபோல, பாராளுமன்றத்தில் நாங்கள் அதற்குள்ளே ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருக்கிறோம். அதைத்தவிர, பிரதான பங்காளி கட்சியான தமிழ் முற்போக்கு கூட்டணி, மலையகம் எங்கும் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்துவிட்டது. நீங்கள், ஊடகங்களில் பார்த்திருப்பீர்கள் நுவரெலியாவிலே, ஹட்டனிலே, தலவாக்கலையிலே, இராகலையிலே ஆரம்பித்துவிட்டோம்.

இதேபோல, பல்வேறு இடங்களில் செய்யப் போகின்றோம். எல்லா இடங்களுக்கும் வருவோம்... உங்கள் கல்முனைக்கும் வருவோம். ஆகவே... எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை செய்து கொண்டுதான் இருக்கின்றோம். ஆகவே, இதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அதாவது இந்த பாழாய்ப்போன அரசாங்கம் வீழ்கிறது . அதற்கு பதில் கூறுமளவுக்கு சிறந்த எதிர்க்கட்சி இல்லையென்ற ஒரு கதையை, கட்டுக் கதையை ஏற்படுத்துவதில் திட்டமிட்ட முறையிலே பலர் செயல்படுகின்றார்கள். அதற்கு உங்களைப் போன்ற ஊடகவியலாளர்களும் பலியாகி விட்டதாகத்தான் நினைக்கின்றேன்.

**கே: ஞானசார தேரரின் நியமனம் நாட்டில் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தி இருப்பதோடு, பேசுபொருளாக மாறியிருக்கின்றது. இது அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடியை திசை திருப்புவதற்கான முயற்சியாக நீங்கள் கருதவில்லையா?**

ஆம், அரசுக்குள்ளே ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடியை திசை திருப்புவதற்காகச் செய்யப்பட்ட முயற்சியாகவும் அமைந்திருக்கலாம். ஏற்கனவே, ஒரு கேள்விக்கு பதில் சொன்னேன். அரசாங்கத்துக்கு உள்ளே பங்காளி கட்சிகள் அரசை எதிர்த்து குரல் கொடுக்கின்றனவல்லவா? எதிரணிக்கு அது போய்விடக்கூடாது எனக் கருதி, அரசாங்கத்துக்குள் உள்ள ஆளுங்கட்சியும் நாங்கள் தான், எதிர்க்கட்சியும் தாங்கள்தான் என்று சொல்வதைப் போல, இந்த குழப்பவாதி தேரரை, இனவாதி தேரரை, தலைவராக நியமித்து ஒரு செயலணியை உருவாக்கி, அது மூலமாக நாட்டுக்குள்ளே அது பேசுபொருளாக கோட்டபாய ராஜபக்ஷ ஏற்படுத்தி இருக்கின்றார் என்றுதான் நாங்கள் நினைக்கிறோம்.

எது எப்படி இருந்தாலும் கூட ஞானசார தேரரை, ஒரு பௌத்த துறவிகளின் சீருடை போத்திய, ஒரு சீருடை பயங்கரவாதி என்று தான் நான் அடையாளப்படுத்துவேன். அவர் இனவாதி. சுயநலவாதி. அவரது நிலைப்பாடு பகிரங்கமாக அவர் அறிவித்திருக்கின்றார். இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு உரியது. அதைத் தவிர, தமிழர்களும் முஸ்லிம்களும் வந்தேறிய குடிகள். இந்து மதமும் இஸ்லாம் மதமும் கத்தோலிக்க மதமும் வந்தேறு மதங்கள் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். என் முகத்துக்கு நேரடியாகவே கூறியிருக்கின்றார். எனது அமைச்சுக்கு வந்து கூறியிருக்கின்றார். அப்பொழுது அவருக்கு அவர் முகத்துக்கு எதிராக நான் நேரடியாக அவருடைய மகாவம்சத்திலிருந்தே பதிலை அளித்து, அவர் ஆணவத்தை அடக்கினேன் என்பது வேறு கதை.

அவர் சொன்னதுக்காக, நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. அப்படியான ஒருவரை கொண்டு வந்து ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணியை உருவாக்கி, அவரைத் தலைவராக நியமிப்பது என்பதால் நாட்டிலே அது பேசுபொருளாக மாறி இருக்கின்றது. இப்படியான செயலை செய்ததற்காக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவைதான் பரிசோதிக்க வேண்டும்.

**கே: நீங்களும் மு.கா தலைவர் ஹக்கீமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவை சந்தித்துப் பேசியுள்ளீர்கள். அதன் நோக்கம் என்னவாய் இருக்கிறது? தமிழ் பேசும் மக்களை ஒன்றுதிரட்டும் முயற்சியா? அல்லது தேர்தலை மையமாகக் கொண்ட செயற்பாடா?**

ஹா...ஹா..ஹா (சிரிக்கிறார்)

ஏன் உடனடியாக தேர்தலை நோக்கிப் போகின்றீர்கள். என்னைப் பொறுத்தவரையிலே நான் ஒரு கட்சியின் தலைவன். கூட்டணியின் தலைவன். என்னைப் பற்றிய கணிப்பீடு எனக்கிருக்கின்றது. நான் எப்பொழுதுமே அடுத்த தேர்தல் என்பதைவிட, அடுத்த தலைமுறை பற்றித்தான் அதிகமாக சிந்திக்கின்றேன். எங்கள் இனத்தின், நாட்டின் பயணத்தைப் பற்றித்தான் சிந்திக்கின்றேன். அந்தப் பயணத்திலே தேர்தல் ஓர் அம்சம் ; இடைத்தங்கல். அவ்வளவுதான். அதுவும் ஜனநாயக நாட்டின் தேவைதான். ஆனால், அதுவே அனைத்துமல்ல. புரிந்துகொள்ள வேண்டும். அந்த புரிதல் எனக்கு நன்றாக இருக்கின்றது. இந்த சந்திப்பு நானும் ஹகீம் அவர்களும் ஷாம் (சம்பந்தன்), தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் அவர்களை சந்தித்து உரையாடினோம். இந்தச் சந்திப்பு, கடந்த இரண்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் – முஸ்லிம் கட்சிகளின் கலந்துரையாடலின் தொடர்ச்சியாகும்.

தமிழ், முஸ்லிம் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்ற கருத்தை வேறு எவரை விடவும், நான் அதிகமாக அடிக்கடி சொல்லி வந்திருப்பது ஊடகவியலாளராகிய உங்களுக்கு நன்றாகத் தெரியும் என நினைக்கின்றேன். தமிழ், முஸ்லிம் கட்சிகள் என்றால், தமிழ் மக்களை அதன் கூறுகளான ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் அத்துடன் முஸ்லிம் மக்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் பொது வேலைத் திட்டத்தின் கீழ் செயல்பட வேண்டும். அதற்குள்ளே தேர்தலும் வரலாம் வராமலும் இருக்கலாம்.

ஆனால், செயற்பட வேண்டும். ஆனால் அப்படியான செயற்பாடு ஒருபோதும் சிங்கள பெருந்திரளான மக்களுக்கு எதிரான செயற்பாடு அல்ல, அதை நான் தெளிவாக சொல்லியிருக்கின்றேன். எங்களது ஒன்று சேரல் என்பது சிங்கள மக்களின் நம்பிக்கையைப் பெற வேண்டும். அது எங்களால், செய்ய முடியும் என்று நம்புகிறேன். அதன் மூலமாகத்தான் அழகான, சுதந்திரமான இலங்கை தாய்நாட்டை கட்டியெழுப்ப முடியும் என நினைக்கின்றேன்.

**இந்த அரசிடம் ஆலோசனைகளும் இல்லை; கேட்கும் பக்குவமும் இல்லை**

எனவே, இந்த பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற கட்சிகள், தங்களுக்கிடையே ஏற்படுகின்ற இணக்கப்பாட்டின் அடிப்படையிலே, எதிர்காலத்தில் தேர்தல்களிலே ஒரே சின்னத்தின் கீழே ஒரே கூட்டணியின் கீழே போட்டியிடலாம். அது அவரவரின் விருப்பம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் கடந்த மாகாணசபைத் தேர்தலிலே தனித்தனியே போட்டியிட்டாலும் கூட கிழக்கு மாகாணசபையில், கூட்டணியாக நிர்வாகம் செய்தார்கள். உண்மைதானே. அது கல்முனைக்காரர்களுக்கு நன்றாகத் தெரியும் தானே.

ஆகவே, எதிர்வரும் தேர்தல்களில் அந்த இரண்டு கட்சிகளும் கிழக்கு மாகாணத்திற்கான பொது வேலைத் திட்டத்தின் கீழே, ஒரே சின்னத்தின் கீழே போட்டியிடலாம். அது அவர்கள் எடுக்க வேண்டிய முடிவு. நான் அல்ல. அவ்வளவுதான். அதேபோல், எதிர்காலத்திலே, தமிழ் முற்போக்கு கூட்டணியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் கட்சிகளும் கூட, ஒரே சின்னத்தின் கீழே, ஒரே கூட்டணியாக, மகா கூட்டணியாக நாடுதழுவிய முறையில் போட்டியிடலாம். அதற்கான வாய்ப்பும் இருக்கின்றது.

ஆனால், நீண்ட எதிர்கால வாய்ப்பிது. ஆகவே, அதை மாத்திரமே மனதில் கொண்டு செயற்படாமல், அதை மனதில் கொண்டு நாங்கள் இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம் என நினைக்கின்றேன். இன்று எங்களது பிரச்சினை பேரினவாத வலையமைப்புக்குள் இருந்து தமிழ் முஸ்லிம் மக்கள் நாங்கள் விடுபட்டு, அதேவேளை, சிங்களவர்களை அரவணைத்துக் கொண்டு, இப்படி இலங்கையராக எங்களை அடையாளப்படுத்துதல் என்பதாகும். அதை செய்யவேண்டிய ஆளுமையும் காத்திருப்பும் தெளிவும் எங்களுக்கிருப்பதாக நான் நம்புகிறேன் அவ்வளவுதான்.

அடுத்த வாரமும் தொடரும் காரசாரம்...



# அரச தரகர்களிடம் ஆட்சி செல்லாது தடுக்க வியூகம்!

## மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஏ. எல். எம். மாஹிர்

**சிறுபான்மைச் சமூகங்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் ஆட்சியை அரசின் தரகர்கள் பிடிப்பதைத் தடுப்பதற்கு தமிழ், முஸ்லிம் தலைமைகள் தீர்க்கமான வியூகங்களை வகுக்க வேண்டுமென, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ஏ. எல். எம். மாஹிர் கூறுகிறார்.**

**இன்றைய மாகாண அரசியல் நிலை தொடர்பாக 'கல்முனைநெற்' உடன் அவர் மனம் திறந்து பேசுகிறார்.**

**கேள்வி: அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சமகால அரசியல் போக்குகள் எப்படி இருக்கிறது?**

**பதில்:** சிறையிலிருந்து வெளியே வந்த பின்னர் மக்களின் நாடித்துடிப்புக்களை அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் கட்சியின் தலைவர் சென்று வருகிறார். அவர்களது கருத்துக்களும் செவிமடுக்கப்படுகின்றன.

இவ்வாறு, தலைவரின் விஜயங்களில் பெறப்படும் அனுபவங்கள், மக்களின் அறிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு கட்சியின் அடுத்த கட்டப் பணிகள் மும்முரப்படுத்தப்படவுள்ளன. எந்தத் தீர்மானங்கள் எடுத்தாலும் அவற்றுக்கு கட்டுப்பட்டு கட்சிப் பணியில் தொடர்ந்தும் பயணிக்கவுள்ளேன்.

**கேள்வி: அம்பாரை மாவட்டத்தில் உங்களது கட்சியைச் சேர்ந்த சிலர், பிரபல்யங்களுக்காக எதையெதையோ செய்கின்றனர். ஆனால், உங்களது செயற்பாடுகள்...?**

**பதில்:** பிரபல்யங்களுக்காகச் செய்வது வேறு, பிரயோசனங்களுக்காகச் செய்வது வேறு. எதை, எவர் எதற்காகச் செய்கின்றனர் என்பதை மக்களால் புரிந்து கொள்ள முடியும். அந்தளவுக்கு அரசியலில் மக்கள் தெளிவடைந்துள்ளனர்.

நான், எதையாவது செய்ய அல்லது சாதிக்கப் புறப்பட்டால் சமூகத்துக்குப் பிரயோசனமாகத்தான் அது இருக்கும். அதற்காக ஏனையோர் செய்வது சமூகத்துக்கு பிரயோசனமற்றது என்பதும் இல்லை.

**கேள்வி: அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாரை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரின் அண்மைக்கால செயற்பாடுகள், கட்சியிலிருந்து அந்நியப்பட்டதாக சிந்திக்க வைக்கிறதே!?**

**பதில்:** கருத்துச் சுதந்திரம் என்பது ஜனநாயக அரசியலில் தவிர்க்க முடியாதது. ஏதாவது ஒன்றுக்காக ஒருவர் பேசினால், தங்கள் தனிப்பட்ட நோக்கங்களுக்காக சிலர் அதைத் தூக்கிப்பிடிக்கின்றனர்.

எமது மாவட்ட எம்பியின் விடயத்திலும் இதுதான் நடப்பதாக நான் உணர்கிறேன். என்னதான் நடந்தாலும், எல்லாம் தீர்ந்துவிடக் கூடியதுதான். அம்பாரை மாவட்டத்தில் எங்கள் கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைத்தது அங்கீகாரத்துக்கான அடையாளம்தான். எனவே, தலைமையும் இவ்விடயத்தில் நெகிழ்வுத் தன்மையுடன் நடக்கும் என்றுதான் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

**கேள்வி: உள்ளூராட்சி சபையில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்ட சுழற்சி முறை ஆசனங்கள், சிலருக்கு கிடைக்காமலிருக்கிறதே ஏன்?**

**பதில்:** உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2018 இல் நடத்தப்பட்டது. அப்போது நல்லாட்சி அரசாங்கத்தில் எமது கட்சியும் இருந்ததால், ஐக்கிய தேசிய கட்சியின் யானைச் சின்னத்தில் இணைந்து சில சபைகளில் போட்டியிட்டது.

**தமிழ் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் இணைந்தால் வெற்றி உறுதி**

பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் யானைச் சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட நேரிட்டது. இதனால், யானைச் சின்னத்தில் தெரிவான எங்களது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி சட்ட நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதால், உறுப்பினர்கள் பதவி விலகி ஏனையவர்களுக்கு சுழற்சி முறையில் இடம்கொடுக்க முடியாதளவுக்கு சட்டச் சிக்கல்கள் எழுந்துள்ளன. இதனால்தான், சுழற்சி முறையில் இன்றும் இழுபறி நிலவுகிறது.

**கேள்வி: சம்மாந்துறை மக்களின் கரங்கா வட்டை பற்றிய சர்ச்சை, தற்போதைய நிலைப்பாடுகள் எவ்வாறு உள்ளன?**

**பதில்:** இவ்விடயம் நீதிமன்றத்தில் இருப்பதால் தீர்ப்பு வரும் வரைக்கும் எதையும் சொல்ல முடியாது.

'தேசத்துக்கு மகுடம்' (தெயட்டகிருள) அம்பாரையில் நடத்தப்பட்டது. இதில், பங்குபற்றிய அதிகாரிகள், அரசியல் தலைவர்கள், பொதுமக்களின் வாகனங்கள் தரித்து நிற்பதற்குத்தான் இந்தாக் காணிகள் அப்போது வழங்கப்பட்டது. இதனால், பிறரது பார்வைகளுக்கு இந்தக் காணிகள் தென்படத் தொடங்கின. எனினும், இது பறிபோன காலகட்டத்தில் அரசாங்கத்தின் பங்காளியாக இருந்தவர்கள், மாகாண சபையில் அதிகாரத்தில் இருந்தவர்கள் உள்ளடங்கலாக, அம்பாரை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவராக செயற்பட்டவரும் தலையிட்டு இவற்றை மீட்டிருக்கலாம்.

**பேட்டி கண்டவர்: நிப்ராஸ்**

**கேள்வி: நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தல்களில் உங்களது கட்சி எந்தக் கூட்டணியில் இணையுமென எதிர்பார்க்க முடியும்?**

**பதில்:** நான், ஏற்கெனவே சொன்னதைப் போன்று, இதற்கான கள நிலவரங்களை அறியும் நோக்குடன்தான் கட்சித் தலைவர் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு வருகிறார்.

ஆனால், என்னிடம் தனிப்பட்ட யோசனை உள்ளது. தமிழ், முஸ்லிம் ஏக தலைமைகளாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எங்களது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இணைந்து போட்டியிடுவது சிறப்பாக இருக்கும். ஆட்சியும் அரசின் தரகர்களிடம் செல்லாது தடுக்கப்பட்டு சிறுபான்மைத் தலைமைகளிடம் வரும்.

**கேள்வி: சிறுபான்மை சமூகங்களின் மாகாணங்களை (வடக்கு, கிழக்கு) கைப்பற்றும் உங்களது வியூகங்களை விளக்கமாக சொல்ல முடியுமா?**

**பதில்:** மூன்று கட்சிகளும் இணைந்து போட்டியிட்டால் இருபது ஆசனங்கள் கிடைப்பது உறுதி. மீதி 17 ஆசனங்களும் ஏனையோரிடம் இருந்தாலும் ஆட்சி அமைக்க முடியாதே! இன்னும், ஓரிரு ஆசனங்களுள்ள ஆனால், எங்களது அணியில் இல்லாவிட்டாலும் தமிழ் தேசியத்தை விரும்பும் கட்சிகளும் எங்களுடன் இணையும் என எதிர்பார்க்கலாமல்லவா?

**கேள்வி: தமிழ் தேசிய கூட்டமைப்பு முஸ்லிம் தலைமைகளுடன் இணைந்து போட்டியிடுவது சாத்தியமானதுதானா?**

**பதில்:** இப்போதுள்ள நிலைமையில் இது சாத்தியமில்லை. ஆனால், எப்போதும் இது சாத்தியமாகவே வேண்டும். ஒரு சிலரின் பழிச்சொல்லுக்காகத்தான், இந்த இணைவு பற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பும் முஸ்லிம் தலைமைகளும் யோசிக்கின்றன. பறவாயில்லை... தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து கொள்ளும் நடைமுறைகளும் அரசியலில் உள்ளதே!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து போட்டியிட்டால் போனஸ் ஆசனங்களுடன் சேர்த்து 14 ஆசனங்களைப் பெறலாம். தனித்துப் போட்டியிட்டால், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆறு ஆசனங்களை இலகுவாகப் பெறும். இணைந்தால் இருபது ஆசனங்களைக் கொண்டு ஆட்சியமைக்கலாம்.

பின்னர் முதலமைச்சர்களின் தவணைகளைப் பங்கிடலாம். இந்த வியூகம்தான், பேரினவாதத்துக்கு பாடமாக அமையும். கிழக்கில் இது சாத்தியமானால், வடக்கில் ஆட்சியமைக்கத் தேவையான ஆசனங்களை முஸ்லிம் தலைமைகள் வழங்கும்தானே!

**கேள்வி: இவ்வாறு, சிறுபான்மைச் சமூகங்களின் தலைமைகள் ஒன்றிணைவது, தென்னிலங்கையில் ராஜபக்ஷக்களைப் பலப்படுத்தும் என்று நினைக்கவில்லையா?**

**பதில்:** இந்த அரசாங்கம் இன்றுள்ள நிலையில், எந்த முயற்சிகளும் அவர்களைப் பலப்படுத்தாது. அரசாங்கத்தைக் கொண்டு வந்தவர்களே வீதிக்கு இறங்கிவிட்டனர்.





# அக்கரைப்பற்றில் புத்தக பண்பாட்டை நோக்கிய திருவிழா

புத்தகங்களைத் தேடிவரும் வாசகர்களை பார்க்கும்போதுதான் எழுதுவதின் மீதான நம்பிக்கை பிறக்கிறது.

அக்கரைப்பற்று புத்தக காட்சி இனிதே நிறைவுற்றிருக்கிறது. இறுதி நாள்வரை புத்தக பண்பாட்டை நோக்கிப் பெரும் திருவிழா போல புத்தகங்களைக் கொண் டாட இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல்வேறு வகைப்பட்ட வாசகர் களும் படைப்பாளிகளும் ஒன்றாக சங்கமித் தபடி இருந்ததினை அவதானிக்கமுடிந்தது.

புத்தக வெளியீடுகள், அறிமுகங்கள், போட்டி நிகழ்ச்சிகள் மற்றும் கலை நிகழ்வுகள் என ஒழுங்குவரிசையில் நிகழ்வு கள் கட்டமைக்கப்பட்டு மிக நேர்த்தியாக நடாத்தப்பட்டு வெற்றி கண்டிருக்கிறது. முக் கியமாக இதையொட்டியதாக 'வழித்தடம்' எனும் சஞ்சிகை ஒன்றும் வெளிடப்பட் டிருந்தது.

பேராசிரியர் நுஃமான் அவர்களை அட்டைப்படமாகக் தாங்கி வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கும் வழித் தடம் தன் தொடர்ந்த வருகையால் இலக் கியச் சூழலில் பெரும் தடத்தைப் பதிக்கும் என நம்புகின்றேன்.

இவற்றுக்கெல்லாம் மூலகர்த்தாவாக இருந்த தோழரும் இலக்கிய செயற்பாட் டாளருமான சிராஜ் மஷ்ஹூர் அவர்கள் எல்லாவற்றையும் தன் கடின உழைப் பாலும், அர்ப்பணிப்பாலும் சாத்தியமாக் கியிருக்கிறார். எழுத்தையும், சமூகத்தையும் நேசிக்கும் ஒருவரால்தான் இவ்வாறான செயற்பாடுகளை செயலில் காண்பிக்க முடியும்.

கொரோனா என்றதொரு நீண்ட இடைவெளிக்கு பின்னர் சக இலக்கியச் செயற்பாட்டாளர்கள் பலரையும் நேரில் பார்த்து பேசக்கிடைத்தது வரமே.

இலக்கிய தோழர்களான லபீஸ், திருக்கோவில் கவியுவன், றியாஸ்குராணா, கவிஞர் ஜமீல், திரைப்பட இயக்குனர் ஹஸீன், சாதிர், சாஜித் மற்றும் வடக்கில் இருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் கருணாகரன் போன்றோர் தங்களை நாடிவரும் வாசகர்களுக்கு புத்தகங்களை பரிந்துரை செய்து கொண்டிருந்ததை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. எங்கோ ஒரு தொலைவில் நடந்து கொண்டிருந்தவைகளெல்லாம் மிக அருகில் நடப்பதைப் பார்க்கையில் இனம்புரியாத பேரானந்தம் என்னை ஒட்டிக்கொண்டது.

புத்தகங்களை தேடிவந்து அடுக்குகளி லும் பரப்புகளிலும் இருந்தவற்றை கைக ளில் தூக்கி விரித்த சிறுவர்களைக் காணும் போது இம்மகிழ்ச்சி இரட்டிப்பானது.

முடிந்தவரை தேடிவந்த சில மாணவர் களுக்கும், தோழர்களுக்கும் முக்கியமாக புதிதாக வாசிக்கத்தொடங்கி புத்தகங்களை வாங்க வந்தவர்களுக்கும் நேரிலும், நேர லையிலுமாக சில புத்தகங்களை பரிந்துரை செய்து அறிமுகமும் செய்திருந்தேன்.


தங்கள் தேடலினால் சப்ரியின் பாத்திமா புத்தக நிலையமும் சிராஜ் அவர்களின் பேஜஸ் புத்தக நிலையமும் பல வகைமையான புத்தகங்களைக் குவித்து இந்நிகழ்வின் நோக்கத்தை பூரணப்படுத் தியிருந்தார்கள்.


இவர்களோடு இணைந்ததாக சமுத்ரா புத்தக நிலையத்திற்கும் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முகப்புத்தகத்திற்கும் பாடப் புத்தகங்களுக் கும் வெளியே இன்னுமொரு உலகம் இருப் பதை உணர்ந்த பலரையும் ஒன்றிணைத்த சிராஜ் மஷ்ஹூரும் அவருக்குப் பக்க பலமாக இருந்த அத்தனைபேரும் போற்று தலுக்குரியவர்கள்.

இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற திருவிழாக்களை கொண்டாடித் தீர்ப்போம்.

**டணிஸ்கரன்**





03ஆம் பக்கத் தொடர்ச்சி...

## ஆரோக்கியமான நகர்வு

இருந்தாலும், தமிழ், முஸ்லிம் சமூகங் களின் ஏக தலைமைகள் என்ற அந்தஸ்த் தைப் பெற்றுள்ள, தமிழ் தேசிய கூட்ட மைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் என் பவற்றுக்கு இந்த மீளிணைவுகளில் விருப்புக்கள் இருந்தாலும், சமூகங்களின் அடிமட்டங்களிலிருந்து எழும் எதிர்ப்புக் களால் அவை கைவிடப்படுவதுண்டு.

பேரினவாதிகளின் இரும்புப் பிடியை இடித்துடைத்து ஒருமொழிச் சமூகங்கள் என்ற பொது அடையாளத்துக்குள் தமிழ ரும் முஸ்லிம்களும் வரவேண்டிய காலங் கள் பல தடவைகள் கைவிடப்பட்டதும் இதனால்தான்.

முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரின் சந்திப்புகளும் அரசியல் நகர்வுகளும் ஆரோக்கியமான முன்னெ டுப்புக்கள் தான்.

ஆனால், சிங்கள சமூகம் இதனை சந்தே கக்கண் கொண்டு பார்க்கும் அளவுக்கு இருதரப்பு நகர்வுகளும் அமைந்து விடக்கூடாது.

சமூகங்களும் ஒன்று படுவதை ...பாத இனவாத சக்திகள், சிங்கள மக்களை உசுப்பிவிட்டு, தவறாக வழி நடத்துவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய அரசி யல் சூழ்நிலையும் அப்படித்தான் இருக் கிறது.

"இல்லாதவன் தலையில் தான் பொழுது விடியும்" என்பார்கள். தமிழ், முஸ்லிம் மக்களின் கடந்தகால வரலாறும் அப்படித்தான். தோல்வியடையும் ஆட்சி யாளர்கள் சிறுபான்மையினர் மீது பழி சுமத்துவதும், வன்முறைகளை தூண் டுவதும் தான் கடந்த காலங்களில் நடந்திருக்கின்றன.

இழந்திருக்கும், செல்வாக்கை தக்க வைத்துக் கொள்ள இனவாதிகள், சிறு பான்மையினர் மீது, புலிப் பூச்சாண்டி காட்டி, அப்பாவி சிங்கள மக்களை திசை திருப்புவதற்கான சந்தர்ப்பங்கள் அதிக மாகவே இருக்கின்றன.

ஆகவே, அரசியல் கள நிலவரத்தை, இனவாதிகள் தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ளாத வகையில், தமிழ் - முஸ்லிம் தரப்பினரின் பேச்சுவார்த்தை முன் நகர்வுகள் அமைந்தால் அதுவே, ஆரோக் கியமான அரசியல் கலாசாரத்துக்கு வழி வகுக்கும்.

## நாளை பாண்டியூரான் கவிதை நூல் வெளியீடு

கவிஞர் பாண்டியூரானின் கவிதை நூல் வெளியீடு நாளை (14) ஞாயிற்றுக் கிழமை பி. ப. 3.30 மணிக்கு உவெஸ்லி உயர்தர தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது.



# உளவியல் ஆலோசனை மையம்



## வாழ்வுரிமையை இழக்கத் துணிவோருக்கு புதுவாழ்வளிக்கும் சமூக அமைப்பு

**உளவியல் ஆலோசனை மையம் என்பது தன்னார்வத் தொண்டு அமைப்பாகும். வாழ்வில் நொந்துபோய், வெறுத்து உயிரை மாய்த்துக்கொள்ள நினைப்போருக்கு புத்துயிர் ஊட்டும் ஒரு தொண்டு நிறுவனம். முழுக்க முழுக்க சமூக சேவையை இலக்காகக் கொண்டு இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது. இலாப நோக்கற்று சமூகத்துக்காக தன்னார்வத்தோடு இறங்கி துணிந்து செயல்படும் இளைஞர்களுக்கு எங்களது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம். *PAC* குழுமத்தின் முதலாவது தலைவர் மற்றும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் செல்லையா நிவேதித் அவர் வழங்கிய சிறப்பு பேட்டியை இங்கே தருகின்றோம்.**

**Q உளவியல்ஆலோசனைமையம் எனும் அமைப்பு உருவாக்கிய தன் நோக்கம்? எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அமைப்பின் முதலாவது தலைவர் என்ற ரீதியில் விபரியுங்கள்.**

2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில், குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் அதிகளவிலான தற்கொலைகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிந்தது.

அதிலும், குறிப்பாக இளவயது/பாடசாலை மாணவர்களின் தற்கொலைகளே அதிகளவில் காணப்பட்டது. அதைப்பற்றி எமது நட்பு வட்டாரத்துக்குள் பேசப்பட்டு, இதற்கு எம்மால் என்ன முயற்சிகளை மேற்கொள்ளலாம் என சிந்தித்தவேளை, முதற்கட்டமாக அது சம்பந்தமாக கலந்துரையாட ஒருசிறு குழு ஆரம்பிக்கப்பட்டது.

அந்த குழுவினுள் தற்கொலைக்கான அடிப்படை காரணங்கள் பற்றி ஆராயப்பட்டதுடன் இதை தடுக்க எவ்வகையான முயற்சிகளை மேற்கொள்ளலாம், அதை எவ்வாறு செயற்படுத்தலாம் என்று ஆரம்பித்த நட்பு ரீதியான கலந்துரையாடல், இன்று பலரின் ஒத்துழைப்பினாலும் முயற்சியினாலும் இன்று ஒரு சமூக மயப்படுத்தப்பட்ட கட்டமைப்பாகியுள்ளது.

பலரின் ஒன்றிணைந்த முயற்சியின் நீட்சியே இன்று இலங்கை பூராகவும் பல தன்னார்வலர்களை கொண்டு பல செயற்திட்டங்களையும், 24 x 7 உதவி மற்றும் வழிகாட்டல் செய்யும் ஒரு மையமாக வியாபித்துள்ளது.

**Q உளவியல்ஆலோசனைமையத்தின் கடந்த கால செயற்பாடுகள்?**

எம்முடைய குழுமத்தில் உளவியல் துறை தேர்ச்சியாளர்கள் மட்டுமல்லாது பல்துறை சார்ந்தவர்கள் பலரும் தன்னார்வலர்களாக பயணிக்கின்றனர்.

அந்தவகையில் எமது பணி பாடசாலை மட்டத்திலிருந்தும் கிராம மட்டத்திலிருந்துமே முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 2019ஆம் வருட ஆரம்பத்திலிருந்து இன்றுவரை வடக்கு கிழக்கு மற்றும் மலையக பகுதிகளில் பல பாடசாலைகளில் உளவியல் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கியுள்ளோம். அது மட்டுமல்லாது தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இரத்ததான முகாம், பேரிடர் கால உதவித்திட்டம் மற்றும் கடற்கரை சுத்தம் போன்றவற்றையும் மேற்கொண்டுள்ளோம்.




அத்துடன் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை மட்டத்திலான மற்றும் திறந்த வெளி உளவியல்சார் கட்டுரைப் போட்டிகள், குறுந்திரைப்படப் போட்டிகளும் எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமல்லாமல் எமது 24 x 7 *HOTLINE* உதவி மற்றும் வழிகாட்டல் சேவையினூடாக தேர்ச்சி பெற்ற உளவியலாளர்கள் மூலம், இதுவரை இலங்கை மட்டுமல்லாது புலம்பெயர் நாடுகளில் வாழும் உறவுகள் கூட பயன்பெற்றுள்ளனர், தொடர்ந்தும் பயன்பெற்றுவருகின்றனர்.

**Q உளவியல் ஆலோசனை மையத்தின் கட்டமைப்பு எவ்வாறு உருவக்கப்பட்டுள்ளது? வருடாந்த நிருவாக தெரிவுகள் எவ்வாறு இடம்பெறுகின்றது?**

உளவியல் ஆலோசனை மய்யத்தின் கட்டமைப்பானது பல பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எமது குழுமத்தின் மிகமுக்கிய பிரிவாக 24 x 7 உதவி மற்றும் வழிகாட்டல் பிரிவு செயற்படுகிறது. அத்துடன் நிர்வாகப் பிரிவு, மனிதவளப் பிரிவு, ஊடகப் பிரிவு, செயற்திட்டப் பிரிவு, ஆலோசனைக்குழு போன்றவைகள் தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை மிக நேர்த்தியாக நிறைவேற்றி வருகின்றன.

அத்துடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குரிய பணி விபரம் பற்றி அறிவுறுத்தப்படும்.

மாவட்ட ரீதியான செயற்பாடுகள் அனைத்துமே குறித்த ஒருங்கிணைப்பாளரின் தலைமையில் இடம்பெறும்.




அனைத்து பிரிவுகளையும் மேற்பார்வை மற்றும் வழிநடத்தும் பணியை நிரந்தர இயக்குனர் குழு மேற்கொள்கிறது.

எமது குழுமத்தின் நிர்வாகத் தேர்வு ஒன்றரை வருடத்திற்கு ஒரு முறை ஜனநாயக முறையில் இலத்திரனியல் வாக்கெடுப்பு மூலம் இடம்பெறும். இந்த வாக்களிப்பில் அனைத்து தன்னார்வலர்களும் கலந்துகொண்டு கடந்த கால செயற்பாடுகள் அனுபவங்களை கருத்திற்கொண்டு நிர்வாகத்திற்கு பொறுத்தமானவர்களை தெரிவு செய்வர்.

3ஆவது நிர்வாகசபைத் தேர்தல் கடந்த 24. 10. 2021 ஜனநாயக முறையில் இடம்பெற்று 10. 11. 2021 உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

**Q அமைப்பின் செயற்பாடுகள் இதில் உள்ள இயக்குனர் சபை உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்புடனும் ஏனைய தன்னார்வலர்களின் மாத சந்தாவுடனும் இடம்பெறுகிறது. எதிர்கால செயற்பாடுகள் மேலும் விரிவடையும்போது எவ்வாறான ஒத்துழைப்புகள் அமைய வேண்டும் என்று எண்ணுகின்றீர்கள்?**

ஆம். எங்களுடைய உளவியல் சார் செயற்பாடுகள் அனைத்தும் இதுவரை எம்முடைய உறுப்பினர்களுடைய நிதிப்பங்களிப்பினூடாகவே நடைபெற்று வருகின்றது.

அதைத்தாண்டிய சில செயற்பாடுகள், குறிப்பாக இரத்ததான முகாம்கள் மற்றும் பேரிடர் கால உதவித் திட்டங்கள் போன்றவற்றை சில நண்பர்களின் நன்கொடைகளின் மூலமும் மேற்கொண்டு வருகின்றோம்.

எதிர்வரும் காலங்களில் பல செயற்திட்டங்களை அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன்இணைந்து மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அந்தவகையில், நிதிப்பங்களிப்பை பங்கிட்டு செயற்திட்டங்களை மேற்கொள்ளலாம் எனவும் எண்ணியுள்ளோம்.

அத்துடன் நாட்டின் அசாதாரண சூழ்நிலை முழுமையாக சுமூகமாகிய பின் நிதி திரட்டும் செயற்திட்டங்களை மேற்கொண்டு அதன் மூலமும் பல உளவியல் சார் செயற்திட்டங்களை பாடசாலை மற்றும் கிராம மட்டங்களில் செயற்திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கின்றோம்.



# விருதுகளை தனதாக்கும் இயக்குனர் கல்முனை ஜோயல்



கல்முனையை பிறப்பிடமாக கொண்ட ஜோயல் ஜைரஸ் ரவீந்திரன் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் கல்விகற்று கிழக்கு பல்கலைக்கழகம் திருமலை வளாகத்தில் தொடர்பாடல் கற்கையில் விடேச பட்டம் பெற்றவர். தற்போது கிழக்கு பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார்.

'அவளா நீ?' எனும் நகைச்சுவை காணொளியை அடுத்து 'வாஞ்சை' எனும் குறும்படத்தின் மூலம் கலைத்துறையில் குறும் படங்களை இயக்க ஆரம்பித்தார். 'வாஞ்சை' குறும்படம் வறிய சிறுவனின் கல்வியின்பாலான வாஞ்சையை கூறுவதாய் அமைந்தது. இக்குறும்படம், 2015இல் '**ரதி**' விருதினைப் பெற்றுக் கொண்டது.

அடுத்த படைப்பான 'தேவதை' குறும்படம் மனிதம் பற்றியதாகும். இக்குறும்படத்திற்காக குழந்தை நட்சத்திரம் 'ஏஞ்சல்' 4 முறை சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதினை பெற்றுக் கொண்டார்.

'இதுவும் கடந்து போகும்' - சாதி, தீண்டாமை பற்றிய குறும் படம். தேசிய இளைஞர் குறும்பட போட்டியில் சிறப்பு விருதினை பெற்றுக்கொண்டது.

*'The Broken Ladder'* பகிடிவதை பற்றிய குறும்படம். தேசிய ரீதியில் சிறந்த குறும்படம், சிறந்த இயக்குனர் மற்றும் சிறந்த நடிகருக்கான விருதுகளை பெற்ற குறும்படம்.

*'The Last seed'* காடழித்தல் பற்றிய ஒரு நிமிட குறும்பட போட்டிக்காக உருவாக்கட்ட குறும்படம். தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

'நீ' சூழல் சம்பந்தமான நகைச்சுவை குறும்படம்.




2050 சூழல் மாசடைதல் சம்பந்தமாக தேசிய குறும்பட போட்டிக்காக எடுத்த குறும்படம்.

சிறப்பு விருதினை பெற்றதோடு, இந்தியாவில் நடைபெற்ற குறும்பட போட்டியில் முதலிடம் பெற்றது. பங்களாதேஷ் மற்றும் இத்தாலி நாடுகளில் திரையிடப்பட்டது.

தேவதை *returns* மனித உணர்வுகள், உடலுறுப்பு தானம் பற்றிய குறும்படம். தேசிய ரீதியில் விருதுகள் பெற்றதுடன் இந்தியாவில் திரையிடப்பட்டது.

'நான்' 48 மணிநேர குறும்பட போட்டிக்காக 48 மணிநேரங்களில் உருவாக்கிய குறும்படம். வாழ்க்கையின் எதிர்வினை பற்றியது.



*'The Second Face'* கைப்பேசி மூலம் தேசிய குறும்பட போட்டிக்காக எடுக்கப்பட்டு முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டது. இது இனங்களுக்கிடையிலான பிரச்சினையை பற்றி பேசுகின்ற குறும்படம்.

'மின்' மின்விபத்துக்கள் பற்றிய குறும்படம்.

*'The Queen'* திருநங்கைகள் பற்றிய குறும்படம். சர்வதேச ரீதியில் 40இற்கும் அதிகமான சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப் பட்டது.

*'Beyond the Border'* இனப்பிரச்சினை, புரிந்துணர்வு பற்றிய குறும்படம். தேசிய குறும்பட போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

*'Butterflies'* தரம் ஐந்து மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கூறும் ஆவணப்படம். தேசிய இளைஞர் ஆவண, குறும்பட போட்டியில் 3ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது.

'தான்தின்னிகள்' போதைப்பொருள் சம்பந்தமான குறும்படம்.

*'The Ink & The Power'* ஜனநாயகம் பற்றிய குறும்படம். பௌர தேசிய குறும்பட போட்டியில் சிறப்பு விருதினை பெற்றுக்கொண்டது.

'சேராக்கரைகள் *Zero chance'* குறும்பட போட்டியில் முதலிடம் பெற்ற குறும்படம். சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்வது குறித்த குறும்படம்.

'பேசா மொழிகள்' லண்டனில் நடைபெறும் *Liftoff season* திரைப்பட விழாவில் தெரிவாகியுள்ளது.

கொவிட் 19 ஊரடங்கு காலப்பகுதியில் வீட்டிலிருக்கும் வளங்களை கொண்டு, *Curfew Phobia, StayHome Phobia, NIC phobia, Results phobia, VTV Phobia, Loo Phobia* எனும் சில நகைச்சுவை காணொளிகளையும் இயக்கியுள்ளார்.



2018 கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் இளம் கலைஞர் பாராட்டு விருதினை பெற்றுக்கொண்ட இவர் 2020 ஆம் ஆண்டிற்கான விழாவில் அவரது குறும்படம் தான்தின்னிகளிற்காக சிறந்த குறுந் திரைப்படம், சிறந்த திரைக் கதைக்கான விருகளை பெற்றுக்கொண்டார்.

இப்படி பல சமூக அவலங்களையும் தேவைகளையும் தனது படைப்புக்களூடாக வெளிப்படுத்தி வரும் சிறந்த இயக்குனராக ஜோயல் தன்னைத் தானே வளர்த்து வளப்படுத்தி வருகிறார்.

தற்போது வெளியிடப்படாத குறும் படங்களாக *The third law, The wings* ஆகியன காத்திருக்க இன்னும் பல சிறந்த திரைப்படைப்புக்களை உருவாக்கும் முயற்சியில் ஓடிக் கொண்டிருக்கும் இளம் கலைஞர் ஜோயல் அவர்களது பயணம் சிறக்க எமது வாழ்த்துகள்.

இளம் கலைஞர் அறிமுகம்
கு.கிலசன்

# ஒலுவிலூர் அப்துல் சுக்கூர்



அப்துல் சுக்கூர் எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் ஒலுவிலை பிறப்பிடமாகவும் பணி நிமித்தமாக கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

சாதாரண தரம் வரையிலான கல்வியினை ஒலுவில் அல் ஹம்றா தேசிய பாடசாலையில் கற்றதோடு இலக்கியத்தின் மீது கொண்ட அகோர காதல் காரணமாக படிக்கும்போதே பாடசாலையில் கவிதை சிறுகதை பாடல் இயற்றி பாடுவது போன்ற நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கு கொள்வார், அபோதே பல பாராட்டுகளையும் விருது களையும் பெற்றவர்.

2017 தொடக்கம் நேரம் கிடைக்கும் போதெல்லாம் முகப்புத்தகத்தில் ஒலுவிலூர் அப்துல் சுக்கூர் என்ற பெயரில் தனது மனதில் இருந்த வடுக்களை கவிதையாக வடிக்க தொடங்கினார்.

2020 ஆம் ஆண்டளவில் கிழக்கிலங்கையில் பிறை எப்எம் மில் பிரதி சனிக்கிழமை தோறும் ஒலிபரப்பாகும் சந்தன காற்றின் கவிதை வயல் நிகழ்ச்சியில் எழுதி அனுப்புமாறு உரம் போட்டு வளம் ஊட்டி கிழக்கிலங்கையில் அறிமுகம் செய்து வைத்த பெருமைக் குரிய அறிவிப்பாளரும் அவரது நண்பருமாகிய வஹாப்தீன் ஆசிரியருக்கு இவ்வேளையில் நன்றி கூறுவதில் மகிழ்கிறார்.

அதேபோன்று கடல் பறவைகள் குழாமில் தன்னையும் இணைத்து பயணிக்கத் தொடங்கியமைக்கு விசேடமாக கடல் பறவைகள் குழாமின் தலைவி க.சியா உட்பட அதில் இருக்கின்ற நண்பர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்ளவும் ஆசைப்படுகிறார்.

மிக விரைவில் தனது முதல் நூலை வெளியீடு செய்ய எதிர்பார்க்கிறார். அதற்கு தனது ஆசானும் அறிவிப்பாளரும் இலக்கியத்துறையில் புகழ் பெற்றுத் திகழும் வஹாப்தீன் ஆசிரியரின் வழிகாட்டலில் முயற்சி தொடர்கிறது.

எழுதுகோல் மூலமாக சமூகத்தை சீர் திருத்த கூடிய நல்லபிப்ராயம் கொண்ட ஒரு கலைஞராக வலம் வரவேண்டும் என்பதே பெரும் அவாவாக கொண்டவர்.

சமூக நோக்கில் எழுத்துலகில் பயணிக்கும் ஒலுவிலூர் அப்துல் சுக்கூர் அவர்களுக்கு எமது வாழ்த்துகள்.




கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள கோளாவில் கிராமத்தில் பிறந்து வளர்ந்த இவர் 1970இல் இலண்டனுக்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வருகின்றார்.

ஒருவர் ஒரு படைப்பாளியாவதற்கு, எழுத்தாளராக திகழ்வதற்கு அவர் வாழும் சூழலும் வாழ்வியல் அனுபவங்களும் சமூகத்தில் இடம்பெறும் நேர் எதிர்மறையான சம்பவங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் இனம் சார்ந்த அக்கறையும் எல்லாவற்றுக்கும் மேலாக எழுத வேண்டும் என்ற ஆர்வமும்தான் ஒருவரை எழுத்தாளராக்கிவிடும். ஸ்ரீமதி இராஜேஸ்வரி அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட அம்சங்கள் நிறைய இருந்தன. அதனால்த்தான் அவர் ஒரு மிகச் சிறந்த பெண் எழுத்தாளராக முடிந்தது.

இவர் தனது இளம் வயதிலிருந்தே தனது தகப்பனார் சேர்த்து வைத்திருந்த நூல்களை படிக்கத் தொடங்கினார்.

வாசிப்பு ஒருவரை பூரணப்படுத்தும் என்பதற்கு ஒப்பாக இவரது வாசிப்பும் இவரை ஒரு சிறந்த எழுத்தாளராக உருவாக்கி இருக்கின்றது. சிறு வயதில் தேவார, திருவாசகங்களை படிக்கத் தொடங்கிய இவரது வாசிப்பு தன்மை பிற்காலத்தில் பலதுறைகளிலும் புகுந்து படிக்கும் ஆற்றலை, ஆர்வத்தை இவருக்கு ஏற்படுத்தியது. அது வெறுமனே அறிவுத் தேடல் மட்டுமல்லாமல் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரின் நிலைப்பாடுகள், சாதி, மதம், இனம் பற்றிய சிக்கலான விடயங்கள் என்றும் விரிந்தன.

இவர் தனது சிறுவயதிலேயே கட்டுரைகள் எழுதத் தொடங்கினார். ஒரு கட்டுரைப் போட்டியில் கலந்து பரிசு பெற்றார்.

அது அவருக்கு மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் கொடுத்தது. தொடர்ந்து இவர் மாவட்ட ரீதியில் நடந்த கட்டுரைப் போட்டியில் 'பாரதி கண்ட பெண்கள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். அதற்கு பரிசு கிடைத்தது. இலங்கை தேசிய பத்திரிகையிலும் எழுதத் தொடங்கினார். இவரது ஊர் கோவில்கள் பற்றிய கட்டுரைகளை எழுதினார்.

பாடசாலையில் படிக்கும் காலத்தில் இவர் மாணவர்களை சேர்த்து கையெழுத்து பத்திரிகை ஒன்றையும் நடத்தினார். இராஜேஸ்வரி அவர்கள் பாடசாலைப் படிப்பை முடித்து மருத்துவ தாதிப் பயற்சிக்காக யாழ்ப்பாணம் சென்றார். அங்கே இவரது தாதிமார் பாடசாலை வெளியிட்ட 'நர்ஸிங் ஜெர்னல்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்துள்ளார். இவரது 'நிலையாமை' என்ற சிறுகதை வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது.

இவரது 'சித்திரைப் பெண் எழுதி' என்ற சிறுகதை பேராதனை பல்கலைக்கழக பத்திரிகையான 'வசந்தம்' பத்திரிகையில் வெளிவந்தது. இந்தக் கதையில் இவர் யாழ்ப்பாண தமிழ் சமுதாயத்தில் இருந்த சாதி முறைகள், பெண்களின் நிலை, வர்க்க மேம்பாடு போன்ற அம்சங்களை உள்ளடக்கியிருந்தார்.

இந்த கதை அன்று இருந்த முற்போக்கு இலக்கியவாதிகளின் பார்வைகளில் பட்டு அவர்கள் இவர் எழுத்துப் பற்றி பேச வழிவகுத்தது.

தொடர்ந்து இவர் அமரர் டொமினிக் ஜீவா அவர்கள் வெளியிட்ட 'மல்லிகை' சஞ்சிகையில் 'ரத்தினம் அப்பா' என்ற சிறுகதையை எழுதினார். இவர் இதில் யாழ்ப்பாண சாதியுணர்வை துல்லியமாக வெளிக் கொணர்ந்தார்.

இவரது 'சித்திரத்தில் பெண் எழுதி' என்ற சிறுகதைதான் இவருக்கு யாழ்ப்பாணத்தை சேர்ந்த பாலசுப்பிரமணியம் அவர்களை நட்புக் கொள்ள வைத்தது அந்த நட்பு பின்னர் நல்லுறவாகி பின்னர் திருமணத்தில் முடிந்தது.

திருமணத்தின் பின்னர் இவர்கள் லண்டனுக்கு குடிபெயர்ந்தார்கள். இலண்டன் வந்தபின்னர் 'லண்டன் முரசு' பத்திரிகையில் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. இந்த பத்திரிகையில் வெளிவந்த இவரது 'மௌன அலறல்கள்' என்ற கதையை தொடர்ந்து அதே பத்திரிகையில் நாவல் எழுதத் தொடங்கினார்.

இவரது முதல் நாவலாக 'உலகமெல்லாம் வியாபாரிகள்' என்ற தலைப்பில் தொடராக வந்தது. இந்த நாவலுக்காக இவர் பல நேர், எதிர்மறையான விமர்சனங்களை சந்திக்க வேண்டி வந்தது. ஒரு எழுத்தாளர் பொது வெளியில் இவற்றை எதிர்கொள்ள வேண்டியதுதானே. எதையும் கடந்து சென்று படைப்பவரே எழுத்தாளர்.

இவரும் அப்படி கடந்து சென்று படைத்தார். ஆம், தொடர்ந்து இவர் 'தேம்ஸ் நதிக்கரை' என்ற நாவலை எழுதினார். இந்த நாவல் மிகவும் பிரபலமாக அனைவராலும் வரவேற்கப்பட்டது. இது சோகம் ததும்பிய காதல் கதையாக இருந்தது. பின்னர் இது நூல் வடிவம் பெற்று வெளிவந்தபோது இது இவருக்கு 'இலங்கை சுதந்திர எழுத்தாளர்' விருதையும், பரிசையும் பெற்றுக் கொடுத்தது. 1993 இல் இது இவருக்கு கிடைத்தது.

இவர் எழுதிய 'கோடை விடுமுறை' நாவல் அனைவராலும் ஆர்வத்துடன் படிக்கப்பட்டது. இந்த நாவல் இந்தியாவிலும் அறிமுகம் செய்யப்பட்டது. இந்த நாவலுக்கு மறைந்த எழுத்தாளர் கோவை ஞானி அவர்கள் காத்திரமான விமர்சனம் செய்திருந்தார். இவர் கணவர் பாலசுப்பிரமணியம் அவர்களின் விருப்பின்பேரில் ராஜேஸ்வரி அவர்கள் எழுதியது 'தில்லையாற்றங்கரை' என்ற நாவலாகும். இது 1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபின் மக்களின் வாழ்வியல் எப்படி இருந்தது என்பதை சிறப்பாக காட்டுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள கோளாவில் கிராமத்தில் உள்ள மூன்று பெண்களுடனும், அவர்கள் குடும்பங்களுடனும் கதை நகர்கிறது. மிகவும் வேடிக்கையான கதைக்களம். ஜனரஞ்சகமான நடை. இந்த நாவலை 1987 இல் இந்தியாவில் வெளியிட இவரது நண்பர்கள் இருவர் உதவியுள்ளார்கள். இரு தடவைகள் இந்த நூல் அச்சேறியுள்ளது.

இந்த நூலை, கடந்த 06. 11. 2021 அன்று லண்டன் ஆர்ட்ஸ் கவுன்சில் நிதியுதவியுடன் ஆங்கிலத்தில் மொழிபெயற்கப்பட்டு *"The Bank of the River Thillai"* என்ற தலைப்பில் வெளியீடு செய்தார்கள். நிகழ்வில் நானும் கலந்து கொண்டேன்.

இவர் இதுவரை பதினெட்டு தமிழ் நூல்கள் எழுதியுள்ளார். நூற்றுக் கணக்கான கட்டுரைகளும், ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார். இன்னும் எழுதிக்கொண்டு இருக்கின்றார். இவருக்கு 'தமிழ்நாடு கலைஞர் சங்க விருது' உட்பட பல விருதுகள் கிடைதுள்ளன. இவரின் எழுத்துகள் பல தளங்களுக்கு வாசகர்களை அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற்றவை. மனித நேயம், சமூகவியல், வாழ்வியல் மாற்றங்கள், பெண்ணியக்கருத்துகள்,மருத்துவ விளக்கங்கள், உளவியல் கருத்துகள் என்று இவரது படைப்புகள் தடம் பதிக்கின்றன.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பிரதேசத்தில், கோளாவில் என்னும் கிராமத்தை சேர்ந்த இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எமது மண்ணுக்கு கிடைத்த மிகச் சிறந்த பெண் இலக்கியவாதி, சமூக அக்கறை கொண்ட எழுத்தாளர். இவரது படைப்புகள் தமிழர் மத்தியில் நீண்டு நிலைத்து பொக்கிஷமாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.


**இவர் நீண்ட ஆயுளுடன் இன்னும் பல படைப்புகளை படைக்கவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.**

**கோவிலூர் செல்வராஜன்**




# பௌத்திரமான பௌர்ணமி

## நாவல் அறிமுகம்




ஒரு பெண்ணின் துன்பகரமான வாழ்க்கையினை மையப்படுத்தி அமைந்திருக்கும் **பௌத்திரமான பௌர்ணமி** எனும் குறுநாவலானது பெண்ணின் புனிதத் தன்மையினை புலப்படுத்தி நிற்கின்றது.

இந்தச் சமூகத்தில் ஒரு பெண் விதவையானாலோ அல்லது கணவன் நோய் வாய்ப்பட்டுக் கிடந்தாலோ அவளின் துன்பத்தில் இன்பம் கொண்டாட எண்ணி அவளது தனிமையை சாதகமாகப் பயன்படுத்திக் கற்பை சூரையாட எண்ணும் சில கயவர்களுக்கு மத்தியில், தனது கற்பைக் காப்பாற்ற "கொலையும் செய்வாள் பத்தினி" என்ற நிதர்சனமான உண்மையினை தங்கம்மா எனும் கதாபாத்திரம் இந்நாவலில் உணர்த்தி நிற்கின்றது.

கதையின் தொடக்கத்திலிருந்து இறுதி வரை உயிர்புடன் இயங்கும் பாத்திரமாகவும், விவசாயத்தை நம்பி தனது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, வாழ வேண்டிய வயதில் கணவன் பரிசவாதப் படுக்கையில் கிடந்த போதும் மனம் தளராதவளாகவும், அவனைக் காப்பாற்ற எத்தணிப்பதும், கற்பைக் காப்பாற்ற கொலையாளியாக மாறி வாழ்வைத் தொலைத்து சிறையில் வாடுவதும், குமரன் என்கிற காதாப் பாத்திரம் அவளை காப்பாற்ற முயற்சிப்பதுமாக இறுதி முடிவை வாசகர்கள் கையில் ஒப்படைக்கும் விதத்தில் இக்குறுநாவல் அமைந்துள்ளது.

ஒரு பயனுள்ள குறு அகராதியாகவும், குறிப்பிட்ட பல வாக்கியங்கள் குறிப்பிட்ட ஒரு எழுத்தினாலேயே தொடங்கி கதை முடியும் வரை தொடர்ந்து கொண்டிருப்பதும் சொல்லழகும் பொருளழகும் காணப் பட்டிருப்பதும் இந்நாவலுக்கு அழகு சேர்க்கிறது.

கணவனின்றியோ அல்லது ஆண் துணையின்றியோ வாழும் பெண்ணிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி தனக்கு அடிமையாக்க நினைத்து, வன்புணர்வு செய்ய முயலும் அத்தனை கயவர்கள் சமுதாயம் இல்லாது ஒழிய வேண்டும் என்பதே கதாசிரியரான சித்திரவேல் அழகேஸ்வரன் அவர்களின் தீர்க்க முயற்சிக்கும் பிரச்சினையாக உள்ளது.

இந்நாவல் வாசிப்பதற்கு கடினமாக இருந்தாலும்சுவாரஷ்யமான நடையினைக் கொண்டு அமைந்துள்ளது சிறப்புக்குரிய தாகும்.

**க. மங்களேஸ்வரி**
**திருகோணமலை**

# கோகிலா மகேந்திரன்



இவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை விழிசிட்டிக் கிராமத்தில் பிறந்து, பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியையும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியையும் கற்றார். பின் விஞ்ஞான ஆசிரியையாகவும், அதிபர், பிரதிப் பணிப்பாளர் எனவும் கடமையாற்றியுள்ளார்.

கல்வித்துறைக்குச் சமாந்தரமாக உளவியல் பற்றியும் உளவளத்துணை பற்றியும் உளச்சிகிச்சை பற்றியும் கற்று உளவளத்துணையாளராகவும் பணிச் செய்தார். பாடசாலை நாட்களிலேயே சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் மிக்கவராக இருந்து, பணிக்காலத்தில் எழுத்துப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு நாடகத் துறையையும் முற்றாக கற்று நாடக ஆசிரியர் தரப்பரீட்சையிலும் சித்திப் பெற்றிருக்கிறார்.

ஈழத்துஎழுத்தாளர்களுள் தனித்துவமானவராக, சமூக சிந்தனையாளராக, கலைத் திறனாய்வாளராக என பன்முகத் தன்மைகளை கொண்டவராவார். சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், கவிதைகள், விமர்சனங்கள், நாடகங்கள், அறிவியல் புனைவு எனப்பல பிரிவுகளிலும் நூல்களை எழுதியுள்ளார்.

இவரது கதைகளின் சிறப்பம்சம் எனப் பார்த்தால் பாத்திரங்களின் எண்ணங்களையும் செயற்பாடுகளையும் உளவியல் நோக்கில் பார்த்தலையும் ஆராய்வதையும் குறிப்பிடலாம்.

இவரது "அன்பிற்கு முன்னால்" என்ற சிறுகதை முதன் முதலில் 1972இல் குயில் சஞ்சிகையில் வெளியாகியிருந்தது. இந்த வகையில் இவர் எழுதிய 76 சிறுகதைகளில் தெரிவு செய்யப்பட்ட கதைகள் ஆறு சிறுகதை தொகுதிகளாக வெளிவந்தன. இவ்வற்றுள் பிரசவங்கள், வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் ஆகியவை தேசிய சாகித்ய விருது பெற்றவை.

ஈழநாடு பத்திரிகையிலும் சுடர் சஞ்சிகையிலுமாக குறுநாவல்களை எழுதியிருப்பினும் "துயில் ஒருநாள் கலையும்", "தூவானம் கவனம்" என்பனவே நூலுருப் பெற்றுள்ளன. கேள்விகளின் முழக்கம் எனும் நாடகம், வடஇலங்கைச் சங்கீத சபையின் நாடக கலாவித்தகர் என்ற பட்டத்தினை இவருக்கு ஈட்டிக் கொடுத்தது.

இவரது ஆக்கங்கள் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், கொடுமைகளை எதிர்க்கும் வகையிலும், வேலையிடம், வீடு என்பவற்றில் பெண்ணின் சமவுரிமையை வலியுறுத்தும் வகையிலும் அமைந்திருக்கும்.

மேலும், இவர் படைப்புகளில் விண்ணியல், உயிரியல், சூழல் மாசடைதல், மருத்துவம் போன்ற பலதுறைகள் சார்ந்த விஞ்ஞான உண்மைகளும் அடங்கி அறிவுக்கு விருந்து படைப்பதையும் அவதானிக்கலாம்.

சிவனேஸ்வரன் தாரணி
திருகோணமலை

# தகாப்புணர்ச்சி
## சமூகச் சீரழிவின் வெளிப்பாடு



சமூகத்தில் பல்வேறு வன்முறைகள் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வருகின்றன. ஆனாலும், மிகவும் மனவேதனையான விடயங்கள் பல இடம் பெறுகின்றன. அதிலும், தந்தை தான் பெற்ற பிள்ளையுடன் பாலியல் உறவில் ஈடுபடுவதும், அவர்களுக்கு பிறக்கும் குழந்தையை கொலை செய்வது போன்ற சட்ட விரோத செயல்கள் இடம் பெறுவதை ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

கணவன், மனைவிக்கிடையிலான குடும்ப வன்முறைகளால் கணவன், மனைவி பிரிந்து வாழ்கின்றனர். இதனால் பிள்ளைகளுக்கு சரியான பாதுகாப்பு வழங்கப்படாமல் இருக்கின்றன.

இதனால் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கப்படுகின்றனர். தன்னுடைய தந்தைக்கு மகளானவள் பிள்ளை பெற்றுக்கொள்வது ஜீரணிக்க முடியாத ஒரு விடயமாகும். இப்படியான சமூக சீரழிவுகளிலிருந்து பிள்ளைகளை பாதுகாப்பதற்கு ஏற்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்று வந்தாலும், ஆங்காங்கே 'தகாப்புணர்ச்சிகளும்' இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

இதனால், கண்ணியமான வாழ்வுக்குள் இருக்கின்ற தந்தையர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர்.

தந்தை - மகள் உறவு புனிதமானது. கன்னியப்படுத்த முடியாவிட்டாலும், களங்கப்படுத்தாமல் இருப்பதுதான் ஆரோக்கியமான சமூகத்துக்கு சிறப்பாக இருக்கும். தனது காம இச்சைக்குள் மகளை ஈடுபடுத்திய இவர்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக இப்படியான சம்பங்கள் இடம்பெறாமல் குறைக்க முடியும் என ஒரு சிலர் நம்புகின்றனர். காமவெறியர்களுக்கு தண்டனை வழங்கும் அதே நேரம், விழிப்புணர்வு செயல்திட்டங்களும் முன்னெடுப்பது தான் ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப வழிவகுக்கும்.

19 வயதுடைய தன்னுடைய பிள்ளையுடன் தகாத முறையில் பாலியல் உறவில் ஈடுபட்டு பிரசவித்த, சிசுவை கொலை செய்து, கிட்டங்கி ஆற்றில் வீசிய சம்பவம் அண்மையில் சம்மாந்துறை பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




தந்தையே தன் பெறா மகளை காம இச்சைக்கு உட்படுத்தியதாக வெளியான தகவல் அருவருக்கும் சம்பவம் மட்டுமல்ல, சமூகத்தை வெட்கித் தலைகுனிய வைத்திருக்கிறது. தன்னுடைய இரண்டாவது மனைவியினுடைய பெண் பிள்ளையையே தகாத முறையில் பலாத்காரமாக பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட தந்தையர்களும் காம வெறியர்களும் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும்.

நாகரீகம் அடைந்து வருவதாகச் சொல்லும் மனித சமூகம், இப்படியான சமூக சீரழிவுகளை கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரியது.

தாமதம் இல்லாத நீதிமன்றத் தீர்ப்பு மூலம் இவர்களுக்கான உச்சபட்ச தண்டனை நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும். இந்த சமூகம் இதனைத்தான் இப்போது எதிர்பார்க்கிறது.

சமூக விழுமியங்கள், நெறிமுறைகள், மரபுகள், வழமைகள், முறைமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை நாம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் போதே ஓரளவு இப்படியான பிரச்சினைகளுக்கு சமூக தீர்வு காணமுடியும்.

சமூக விழிப்புணர்வு சார்ந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது மிகவும் முக்கியமானது. இவ்வாறான சம்பவங்களில் இருந்து மக்களை அடிப்படையாக வழி நடத்துவதற்கு வழிவகுக்கும்.

மத நிறுவனங்கள் சமூக சீரழிவுகளை குறைக்கும் விதத்தில் இறையச்சம் தொடர்பான விழிப்புணர்வுகளை அதிகரிக்க வேண்டும். அதேபோல, தண்டனைகளும் இறுக்கமானதாக்கப்பட வேண்டும்.

போதைப்பொருட்களின் பாவனைகள் அதிகரித்து வருவதும் காம சேட்டைகளுக்கு ஒரு காரணமாக கூறப்படுகின்றது. எனவே, போதை ஒழிப்பு தொடர்பான வேலைத்திட்டத்தையும் சமூகங்களின் மட்டத்தில் பரவலாக அதிகரிக்க வேண்டும்.

சமூகத்தில் கிராம மட்டத்தில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள் பிரச்சனையான குடும்பங்களை அடையாளம் கண்டு, சமூக வலுவூட்டல் களில் ஈடுபட்டு, அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்ப வழிவகுக்கும்.

இவ்வாறான வேலைத்திட்டங்களில் சமூக நலன் சார்ந்து, அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுவதன் மூலமே, அனைத்து சவால்களையும் முறியடித்து முன்னெடுக்க முடியும்.

மங்கையர் மகுடம்

ஜெனிதா மோகன்

# போலந்து எல்லையில் பதற்றம்; 12 ஆயிரம் படை வீரர்கள் குவிப்பு




பெலாரஸிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் போலந்துக்குள் நுழைந்த புகலிடக் கோரிக்கையாளர்கள், போலந்தின் எல்லையில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டனர்.

சுமார் இருநூறு பேரை இவ்வாறு தடுத்து நிறுத்தியதாக போலந்து பொலிஸார் தெரிவித்தனர். இவர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுமார் மூவாயிரம் படை வீரர்கள் போலந்தின் எல்லைக்குள் அனுப்பப்பட்டதாக போலந்துப் பிரதமர் மரமியுஸ் பிலஷாக் தெரிவித்தார்.

இவ்வாறு, இந்த அகதிகள் நுழைய முற்பட்டதால் ஒருவாரமாக பெரும் பதற்றம் நிலவி வருகிறது. கடுமையான கம்பி வேலிகளையும் உடைத்துக் கொண்டு புகலிடக்காரர்கள் உட்புக நுழைந்ததால், படையினர் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேரிட்டது.

இதனால், ஐரோப்பாவில் மீண்டும் அகதிகள் சர்ச்சை எழுந்துள்ளதாக அவதானிகள் தெரிவித்தனர்.

ஐரோப்பாவுக்குள் நுழையும் புகலிடக் கோரிக்கையாளர்களை கட்டுப்படுத்த சில நாடுகள் கடந்த 2015 இல் கடுமையான நடவடிக்கைகள் எடுத்திருந்தன. இதனால், பெரும் சர்ச்சை எழுந்திருந்தது.

இது போன்ற நெருக்கடிகள் எழுவதை முன்கூட்டியே கட்டுப்படுத்தும் நோக்கில் போலந்து அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்துள்ளது. போலந்து மற்றும் பெலாரஸ் எல்லைகளில் 12,000 த்துக்கும் அதிகமான படை வீரர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்புக்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

சுமார் நாலாயிரம் புகலிடக் கோரிக்கையாயர்கள் பெலாரஸின் எல்லையை நெருங்கி முகாமிட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜப்பான் பிரதமராக மீண்டும் கிஷிடோ தெரிவு!



ஜப்பானின் புதிய பிரதமராக புமியோ கிஷிடோ மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் பிரதமர் புமியோ கிஷிடோ தலைமையிலான லிபரல் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, இவர் கடந்த புதன்கிழமை மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவரது கட்சிக்கு, அறுதிப் பெரும்பான்மை கிடைத்துள்ளதால் தனித்து ஆட்சியமைக்க தகுதிபெற்றுள்ளது.

இவருக்கு முன்னர் பிரதமராக இருந்த யோஷிஹிடே சுகா, கொரோனா நெருக்கடியை சரியாகக் கையாளவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதால்,

தனது பதவிக் காலம் முடிவதற்கு சுமார் 03 ஆண்டுகளுக்கு முன்னரே பதவியை இராஜினாமா செய்தார். இந்நிலையில், சுகாவுக்குப் பதிலாக புமியோ கிஷிடோ பிரதமரானார். இம் மாதம் 4ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

## "கிலாஸ்கோ" மாநாட்டில் புதிய வரைபு: 2030 இல் பலன்களை எதிர்பார்க்க முடிவு!

ஸ்கொட்லாந்து தலைநகர் கிளாஸ்கோ வில் நடைபெறும் காலநிலை மாநாடு வெள்ளிக்கிழமை நிறைவடைந்தது. இதற்கு முன்னதாக கடந்த புதன்கிழமை (10) மாநாட்டின் வரைபு வெளியிடப்பட்டது. 2030 வரைக்கும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி, இந்த வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரிஸ் மாநாட்டில் 2015 இல் எட்டப் பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம், தொழிற்சாலைக் கழிவுகளை இரண்டு பாகை செல்ஸியஸுக்குள் மட்டுப்படுத்தல், நிலக்கரி மற்றும் மசகு எண்ணெய் பயன்பாடுகளைக் குறைத்தல் உள்ளிட்ட நடைமுறைகள் இந்த வரைபில் உள்ளடக்கப்பட்டுள்ளன.




இந்த வரைபுகளை வல்லரசு நாடுகள் முறையாகப் பின்பற்றினால் 2030 ஆண்டளவில், வாயுக் கழிவுகளில் 24 வீதத்தை குறைக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## உள்ளூராட்சி தேர்தல் கட்டம் கட்டமாக! பங்களாதேஷில் பெரும் பதற்றம்

பங்களாதேஷில் நடைபெறும் உள்ளூராட்சி தேர்தல்களில் வன்முறைகள் ஏற்படுமென அச்சப்படுவதால், அங்கு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தமாக உள்ள 4571 உள்ளூராட்சி சபைகளுக்கு கட்டம் கட்டம் தேர்தல் நடத்தப்படும் நிலையில் கடந்த வியாழக்கிழமை 835 சபைகளுக்கு தேர்தல்கள்



நடத்தப்பட்டன. இதற்கு முன்னர் ஜூன் மாதத்தில் 204 சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. இதில் ஆளும் கட்சியான அவாமி லீக் கட்சி 148 உறுப்பினர்களை வென்றெடுத்தது.

பிரமதர் ஷேக்ஹஸீனா தலைமையிலான அரசாங்கம் 2023 இல் அடுத்த பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கவுள்ளதால், தற்போது நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் முடிவுகள் ஓரளவு கட்டியங் கூறுவதாக இருக்குமென அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் காலிதா ஷியாவை கடந்த 2014 இல் தோற்கடித்த அவாமி லீக் கட்சி, 2018 இலும் ஆட்சியைப் பிடித்தது.

இன்னும் இரண்டு வருடங்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளதால், இந்தத் தேர்தல்கள் இரு தரத்தாரதும் பலங்களைப் பரீட்சிக்கும் தேர்தலாகவும் உள்ளது.

இதனால், உள்ளூராட்சி தேர்தல்களில் பெரும் வன்முறைகள் இடம்பெற்று உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

ஜூனில் நடந்த முதலாம் கட்டத் தேர்தலில் பலர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர். வியாழக்கிமை நடந்த தேர்தலில் ஒன்பது பேர் உயிரிழந்து பலர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்நிலையில், எதிர்க்கட்சிகள் கூட்டாகச் சேரந்து இந்த தேர்தலைப் பகிஷ்கரித்துள்ளன.

## தடைப்பட்ட விண்வெளிப் பயணம் மீண்டும் ஆரம்பம்! நான்கு வீரர்கள் புறப்பாடு!




ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் வழியாக, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு நான்கு விண்வெளி வீரர்கள் புறப்பட்டுள்ளனர்.

இவ்வீரர்களின் கலம், அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலிருந்து பல்கோன் 9 ஏவுகணை வழியூடாக விண்வெளிக்குள் பாய்ச்சப்பட்டது.

விண்வெளி வீரர்களில் ஒருவர் மருத்துவப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், விண்வெளிப் பயணம் மேற்கொள்வதற்கு வானிலை உசிதமாக இல்லை என்றும் கூறி, ஸ்பேஸ் எக்ஸின் 'க்ரூ-3' விண்வெளிப் பயணம் கடந்த மாதம் 31ஆம் திகதியிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையிலே மீண்டும் நான்கு வீரர்கள் விண்வெளிக்குச் சென்றுள்ளனர்.

இந்தப் பயணம், அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வகம், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் ஓர் அங்கமாக அமைந்துள்ளது.

இந்த விண்வெளி வீரர்கள் நால்வரும், பூமியின் சுற்றுப் பாதையில் அமைக்கப்பட்ட நிலையத்தில் அடுத்த ஆறு மாதங்களுக்கு ஆராய்ச்சிகளை மேற்கொள்வர்.

அதன் மூலம், வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும் விண்வெளி ஆராய்ச்சிக்குத் தேவையான தகவல் சேகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச விண்வெளி நிலையம் கடந்த இரண்டு தசாப்தங்களாக இவ்வாறான விஞ்ஞான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.